கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு IV

பகுதி - 1

**Kerala Reader - Tamil**

**Standard IV**

**Part 1**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

2015

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

---

**Prepared by** :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2015
*Type setting*: SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education

**அன்புக் குழந்தைகளே!**

அமிழ்தினும் இனியது நம் தமிழ்மொழி. அது நம் தாய்மொழியுமாம். மனிதனைப் பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்துவது மொழி. எந்தக் கல்வியாக இருந்தாலும் அதற்கு அடிப்படையாக இருப்பது மொழியே. மொழியில்லையேல் சிந்தனை வளர்ச்சி இல்லை. எனவே மொழிக்கல்வி இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. பல்வேறு சிற்றோடைகள் ஒன்றாக இணைந்து ஒரு பேராறாக மாறுவது போல, மொழியும் காலந்தோறும் புதுப்புது சொற்களையும் சொற்றொடர்களையும் பெற்று வளரும் தன்மை கொண்டது. மொழி ஒன்றேயாயினும் அதனைக் கையாள்பவரின் திறனுக்கேற்ப அழகும் ஆற்றலும் பெறும். இந்நிலையில் பழையதும் புதியதுமான படைப்புகள் இப்புத்தகத்தில் இடம்பெறுகின்றன. குழந்தைகள் தவறின்றி எழுதுவதற்கும் உச்சரிப்புத் தெளிவோடு பேசுவதற்கும் வழிவகுக்கும் வகையில் செயல்பாடுகள் அமைகின்றன. நான்காவது வகுப்புக் குழந்தைகள் அடைய வேண்டிய மொழித்திறன்களைக் கருத்தில் கொண்டு இப்பாடப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாடப்பகுதிகளை வாசித்தும், எழுதியும் சிந்தித்தும் செயல்பட்டும் வளர்ச்சியடைவோம்.

வாழ்த்துகளுடன்,


**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Committee

## Tamil - IV (Part I)

***Members***

Christhudas, C., Govt. LPS, Glenmary, Idukki.

Elango, S., Govt.UPS, Elappara, Idukki.

Gnanajayaseelan, G., ALPS, Rajamallay, Idukki.

Jayalakshmi, S., Govt. Model HS.LPS, Thycaud, TVPM.

Kumaran, T., GLPS, Kottamallay, Idukki.

Mathiazhagan, P., GUPS, Vannamadai, Palakkad.

Pushparaj, G., ALPS, Yellapetti, Idukki.

Ragu, M., St.Sebastin's HSS, Cheenthalar, Idukki.

Russelraj, R., ALPS, Pullivasal, Idukki.

***Experts***

Dr. Gomathy Nayagam, E., Guest Lr. University of Madras, Chennai.

Dr. Karthikeyan, A., Prof., (Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Nainar. M., Reader., (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Parasuraman, T., Prof., PILC, Pondichery.

Dr. Rajaram, S., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), Chennai.

Dr. Sethupandian, T., Prof., (Rtd.), M.K.University. Madurai.

Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

***Artists***

Nanthakumar, Attampathy. Palakkad.

Radha Krishnan, P., Neyardam. TVPM.

Subin, M.S. Nedumangadu. TVPM.

***Academic Co-ordinator***

Dr. Sahaya Dhas, D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# பொருளடக்கம்


பக்கம்

1. ஆழியின் மடியில் ........ 7 - 24
   - அலைகடல் ........ 8
   - பூமித் தாயின் நீலச் சேலை ........ 12
   - அமைதிக்கடல்கள் ........ 15
   - ஆழிப் பேரலை ........ 20
2. பூமியின் பெருமூச்சு ........ 25 - 42
   - சுத்தம் காத்திடடா ........ 26
   - இயற்கையின் முறையீடு ........ 30
   - விழிப்புணர்வு முகாம் ........ 34
   - வருமுன் காப்போம் ........ 38
3. தாய் மண்ணே, வணக்கம்! ........ 43 - 56
   - பொங்கும் ஒருமை ........ 44
   - கபடி ........ 47
   - இப்படியும் மனிதர்கள் ........ 50
   - எல்லோரும் சமம் ........ 53
4. உழவனின் கையில் ........ 57 - 74
   - கதிரறுக்கும் காலம் ........ 58
   - மரம் வளர்த்த குரங்கு ........ 61
   - உலகின் தொழில் ........ 66
   - உழைத்தாலே உணவு ........ 70
5. காற்றினிலே வரும் கீதம் ........ 75 - 90
   - இணையில்லாத தெய்வீக இசை ........ 76
   - தோல் வாத்தியங்கள் ........ 82
   - வில்லிசை ........ 86
   - ஊனம் ஒரு தடையல்ல ........ 88

சொல்லகராதி ........ 91 - 92

# 1

# ஆழியின் மடியில்



இயற்கையின் அன்னையான கடலின் அழகை ரசிக்க வேண்டும். அவை நமக்குத் தரும் நன்மைகளை நுகர வேண்டும். அவ்வாறே இன்று கடலுக்கு நேரிடும் பல்வேறு பிரச்சினைகளை நாம் ஆராய வேண்டும். அவ்விடர்களைத் தவிர்க்க நாம் ஒன்றுப்பட்டுச் செயல்பட வேண்டும். இவை போன்ற கருத்துகள் குழந்தைகள் பெறும்வண்ணம் இவ்வலகு அமைகிறது.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- இயற்கையோடு தொடர்புடைய கவிதைகளை வாசித்துக் கருத்தை உட்கொண்டு ராகம், தாளம், பாவனையுடன் பாடுகிறார்கள்; பாடல்கள் படைக்கிறார்கள்.
- தான் கண்டு ரசித்த படங்கள், காட்சிகள் ஆகியவற்றிற்குப் பொருத்தமான குறிப்புகள் எழுதி வெளியிடுகிறார்கள்.
- சூழலுக்கேற்றவாறு பொருத்தமான சொற்கள், தொடர்கள் பயன்படுத்தி உகந்த மொழிநடையுடன் உரையாடுகிறார்கள்.
- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பொருள் பொதிந்த தொடர்கள் எழுதுகிறார்கள்.



# அலைகடல்


நீல வண்ணக் கடலிலே
நீந்திச் செல்லும் கப்பலாம்!
வாலைத் தூக்கி அடித்துமே
வாளை மீன்கள் நீந்துமாம்!
சிவந்த நல்ல பவழங்கள்
செறிந்து கிடக்கும் கடலிலே!
உவந்து மாதர் அணிந்திடும்
உயர்ந்த முத்தும் கடலிலே!

வெற்றி கொண்டு ஊதவே
வெள்ளைச் சங்கும் கடலிலே!
உற்ற நண்பன் போலவே
உதவும் உப்பும் கடலிலே!

நாடு விட்டுச் செல்லவே
நல்ல பாதை அலைகடல்!
ஏடு சொல்லும் தமிழர்கள்
கடல் கடந்த கதையினை!

ஈழம் சுற்றி அலைகடல்
வேழம் போல முழங்குமாம்
ஆழங் கொண்ட கடலினை
அவனி எங்கும் காணலாம்!

**பி. வி. கிரி**




## செயல்பாடுகள்

- பாடலைத் தனியாகவும் குழுவாகவும் மெட்டமைத்துப் பாடுங்கள்.

- கடலில் என்னென்ன உண்டு என்று கவிஞர் கூறுகிறார்? எழுதுங்கள்.

எ.கா. :




- நீந்திச் செல்லும் கப்பல்
- ______________________
- ______________________
- ______________________

- நீங்கள் விரும்பிப் பாடிய வரிகள் எவை? ஏன்? எழுதுங்கள்.
  - ______________________
  - ______________________
  - ______________________

- கடலை வருணித்துத் தொடர்கள் எழுதுங்கள்.

எ.கா. :



- நீலவண்ணக் கடல்
- ______________________
- ______________________
- ______________________
- ______________________

**வண்ணச் சொற்களுக்கு இணையான சொல்லைப் பாடலிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.**

- முத்துக்களாலான மாலைகளைப் பெண்கள் அணிவார்கள்.
- யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
- ஆழ்கடலால் உலகம் சூழ்ந்து கிடக்கிறது.
- கடலின் பெருமை பற்றிப் பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளது.

**அடைப்புக்குறிக்குள் வரும் சொற்களைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுங்கள்.**

எ.கா. :


- கடலில் கப்பல்கள் மிதந்து செல்கின்றன.
- _______________________
- _______________________
- _______________________
- _______________________

(மிதந்து, நீந்தி, வேகமாக, மெதுவாக, வலைவீசி)

**பாடல் வரிகளை வாசியுங்கள், தொடர்களைப் பயன்படுத்திப் புதிய பாடல் வரிகள் எழுதுங்கள்.**

அலை அடிக்கும் கடலிலே
        ஆன மட்டும் போகலாம்.
வலை எடுத்து வீசியே
        வாளை மீனைப் பிடிக்கலாம்.

____________
        ______________
____________
        ______________



(ஆழம் உள்ள, அருமையான, பொங்குகின்ற, புனிதமான)




# பூமித் தாயின் நீலச் சேலை

கடல்களையும் கடல்சார் உயிரினங்களையும் பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஜூன் 8ஆம் தேதி சர்வதேசக் கடல்தினம் கடைபிடிக்கப்படுகிறது. கடலைக் காக்க அனைவருக்கும் அதிகாரம் என்பது இந்த ஆண்டு கடல்தினத்தின் மையக்கருத்தாக உள்ளது.

பூமி ஒரு பங்கு நிலத்தாலும் மூன்று பங்கு தண்ணீராலும் சூழப் பட்டுள்ளது. உலகில் உள்ள மொத்தத் தண்ணீரில் 97 சதவீதம் கடல் நீர். இதனால் வானில் இருந்து பார்த்தால் பூமி ஊதா நிறத்தில் தெரிகிறது. கடலால் மனிதர்களுக்குப் பலவிதமான நன்மை கிடைக்கிறது. தற்போது கடல் வேகமாக மாசடைந்து வருகின்றது. முன் எப்போதும் இல்லாத அளவுக்குப் பிரச்சினைகளைக் கடல் சந்திக்கிறது. நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனில், 70 முதல் 80 சதவீதம் கடல் மூலமாக உருவாகிறது, நமக்குத் தேவையான குடிநீரும், கடலில் இருந்து மழையாகக் கிடைக்கிறது, கடல் வழியாகத்தான் அதிகளவு வணிகம் நடக்கிறது,

உலகில் பல கோடி மக்கள் தினமும் உணவு, வருமானம் ஆகியவற்றுக்காகக் கடலைத் தான் நம்பி உள்ளனர், மீனவர்களுக்குக் கடலில் தான் வாழ்க்கையே. உலக மக்களில் பெரும்பகுதியினர் நேரடியாகவோ மறைமுகமாகவோ கடல் மூலம் பயன்பெறுகின்றனர்.

கடலில் பல அரிய வகை உயிரினங்கள் வாழ்கின்றன; பவளப்பாறைகள், பனிப்பாறைகள் உள்ளன. பனிப்பாறைகள் உருகிக் கடல் மட்டம் உயர்கிறது, இதனால் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுகிறது. செயற்கைக் கழிவுகளைக் கடலில் கொட்டுவதாலும், எண்ணெய்க் கழிவுகள் கலப்பதாலும் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. கடல்களில் குறிப்பிட்ட விழுக்காடு பவளப்பாறைகள் அழிந்து விட்டன. மேலும் உள்ள பவளப்பாறைகள். வேகமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. கடலை நாம் கண்டுகொள்ளாவிடில், கண்டிப்பாகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாவோம். கடலின் வளத்தைப் பேண, உலக மக்கள் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம்.



## செயல்பாடுகள்

**படத்தைப் பார்த்து உங்கள் கருத்தைக் கூறுங்கள்.**




**கடலின் சிறப்பு குறித்து உங்கள் கருத்து என்ன? எழுதுங்கள்.**

**எ.கா. :**

- உலகின் பெரும்பகுதியும் கடல் நீர்தான்.
- ______________________
- ______________________
- ______________________

**கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுங்கள்.**




**எ.கா. :**

- கடலில் ஏராளமான மீன்கள் வாழ்கின்றன.
- ______________________
- ______________________
- ______________________

# அமைதிக் கடல்கள்

**மாறன்** : உலகத்தில் பெரிய கடல் எதுப்பா?

**அப்பா** : பசிபிக் கடல்தான், அது அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இருக்கிறது, உலகப் பரப்பில் 35 விழுக்காடு இடத்தை ஆட்கொண்டு உள்ளது.

உலகத்திலேயே ஆழமான கடல் என்ற பெருமையும் இதற்கு உண்டு. இதன் ஆழம் 37 ஆயிரத்து 782 அடி.

**மாறன்** : கடலின் ஆழத்தை எப்படிப்பா கணக்கிடுகிறார்கள் ?

**அப்பா** : ஒரு கம்பில் கனமான குண்டைக் கட்டிக் கடலில் இறக்கி, குண்டு தரையைத் தொடுவதுவரை உள்ள கம்பியின் நீளத்தைக் கணக்கிட்டனர். இது பழைய முறை.

ஒலியலைகளைக் கடலுக்குள் அனுப்பி, அது தரையைத் தொட்டு விட்டுத் திரும்பி வர ஆகும் நேரத்தைக் கணக்கிட்டுக் கடலின் ஆழம் கண்டுபிடிக்கப்படுகிறது. இது புதிய முறை.



மாறன் : இரண்டாவது பெரிய கடல் எது?

அப்பா : அட்லாண்டிக் கடல். இது அமெரிக்காவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையே உள்ளது. இது உலகப் பரப்பில் 2.9 விழுக்காடு இடத்தில் பரவி உள்ளது, இதன் உயர்ந்த பட்ச ஆழம் 27 ஆயிரத்து 498 அடி.



**மாறன்** : நமது இந்தியப் பெருங்கடல்தான் மூன்றாவது இடத்தில் இருக்கிறதாப்பா?

**அப்பா** : ஆமாம். அதன் பரப்பு என்ன தெரியுமா?

2 கோடியே 84 லட்சம் சதுர மைல். இது குமரி முனையில் இருந்து தென் துருவம் வரை பரவிக் கிடக்கிறது. நான்காவது கடல்தான் ஆர்டிக். இது வடதுருவம் அருகே உள்ளது. துருவக்கடல் ஆனதால் வருடத்தில் பாதி நாட்களில் பனியால் உறைந்து கிடக்கும். மீதிக் காலம் பனிக்கட்டி உருகி ஓடும். இங்குக் கப்பல் போக்குவரத்து எதுவும் கிடையாது. 54 லட்சம் சதுர மைல் பரப்பில் இது உள்ளது. இந்த நான்கு கடல்களையும் சமுத்திரம் என்றும் அழைக்கிறோம். இவை தவிர மத்திய தரைக்கடல், பால்டிக் கடல், கருங்கடல், கரிபியன் கடல், செங்கடல் போன்று நான்கு பக்கமும் நிலப்பகுதியால் சூழப்பட்ட உள்நாட்டுக் கடல்கள் உட்பட 16 கடல்கள் உள்ளன.

**மாறன்** : கடலில் அலை உண்டாவதற்குக் காரணம் என்ன அப்பா?

**அப்பா** : சூரியன் மற்றும் சந்திரனின் ஈர்ப்பு சக்தி காரணமாகக் கடலில் அலைகள் உண்டாகின்றன!

**மாறன்** : கடல் நீர் உப்பாக இருப்பதற்கு என்ன காரணம் அப்பா?

**அப்பா** : பல கோடி ஆண்டுகளாகக் கடலுக்கு அடியில் கிடக்கும் பல தாதுப் பொருள்களைக் கடல் நீர் கரைத்துத் தன்னுடன் சேர்த்து வைத்து இருக்கிறது. அத்துடன் மழைநீர் கடலில் கலக்கும்போது நிலத்தின் தாதுப் பொருள்களைத் தன்னுடன் கடலுக்குக் கொண்டு வந்து சேர்த்து உள்ளது. கடல் நீர் ஆவியாகும்போது, அதில் கரைந்துள்ள தாதுப் பொருள்கள் கீழேயே தங்கிவிடுகின்றன. இப்படித்தான் கடல்நீர் உப்புச்சுவை பெறுகிறது. கடலின் அடியில் பல மலைகள், மலைத்தொடர்கள், பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. இமய மலையை விடப் பெரிய மலைகள் பசிபிக் கடலுக்கு அடியில் இருக்கின்றனவாம்.

– மெய்யப்பன்

## செயல்பாடுகள்

உரையாடலை வாசித்து நடித்துக் காட்டுங்கள்



சுதந்திரப் போராட்ட வரலாற்றில் உப்புச் சத்தியாக்கிரகம் முக்கிய இடம் பெற்றது. உப்பு தயாரிப்பது எப்படி? பெரியோர்களிடம் கேட்டு எழுதி வகுப்பில் வாசியுங்கள்.




அறிந்துகொள்ளுங்கள்.

**கடலைச்சுட்டும் வேறு பெயர்கள்**

- ஆழி
- புணரி
- வேலை
- முந்நீர்
- பவ்வம்
- ஆர்கலி
- பரவை
- சமுத்திரம்

கோவளத்திற்குச் சுற்றுலா சென்ற சிங்கியும் மிங்கியும் என்னென்ன பேசிக்கொள்வார்கள். பொருத்தமான உரையாடல் எழுதுங்கள்.



# ஆழிப் பேரலை

சுனாமி என்பது ஜப்பானியச் சொல் ‘சு’ என்றால் ‘துறைமுகம்’. ’நாமி’ என்றால் அலை. எனவே சுனாமி என்றால் துறைமுக அலை என்று பொருள். ஆனால் சுனாமி என்பது துறைமுகங்களில் ஏற்படும் அலை அல்ல. சுனாமி சில நேரங்களில் பேரலை என்று குறிப்பிடப்படுகிறது. சுனாமி தமிழில் கடற்கோள் அல்லது ஆழிப்பேரலை என அறியப்படுகிறது. கடலில் அல்லது ஏரி போன்ற பெரிய நீர்ப்பரப்பில் திடீரெனப் பெருமளவு நீர் இடம் பெயர்க்கப்படும்போது ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலைத்தொடர்களே சுனாமி.

கி.மு. 4 –இல் கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ்தான் முதல் முதலில் சுனாமியின் காரணத்தைக் கண்டறிந்தார். எந்த இடத்தில் நில நடுக்கம் ஏற்படுகிறதோ அந்த இடத்தில் கடல் உள்வாங்கி பின்பு இரட்டை சக்தி கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் சுனாமி ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.



2004 -ஆம் ஆண்டு டிசம்பர் 26-ஆம் நாளன்று ஏற்பட்ட பூகம்பத்தால் தோன்றிய அலைகள் தாம் இந்தியப் பெருங்கடலில் சுனாமியை ஏற்படுத்தின. இதுவே 2004-ஆம் ஆண்டின் மிகப் பெரிய இயற்கை அழிவாகக் கருதப்பட்டது.

சுனாமிகள் இரு வழிகளில் சேதத்தை ஏற்படுத்துகின்றன. பெருமளவு சக்தியுள்ள பெரிய அலை அதிக வேகத்தில் செல்வதால் நிலப்பகுதியை மொத்தமாக அழித்து எல்லாப் பொருட்களையும் தன்னுடன் எடுத்துச் சென்றுவிடும். இதனால் பெரும் சேதம் ஏற்படுகிறது. ஆழமான பெருங்கடலில் ஒரு சுனாமி 200கிலோ மீட்டர் அலை நீளமும் மணிக்கு 800 கிலோமீட்டர் பயணிக்கும் சக்தியும் உடையது.

கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீன் பிடிக்கும்போது எந்த அலையையும் உணராமல் கரைக்குத் திரும்பி வந்தபின் கிராமமே பெரிய கடலலைகளால் அழிவுற்றதைக் கண்டுள்ளனர்.



## செயல்பாடுகள்

- உங்கள் பள்ளியில் சர்வதேசக் கடல்தினம் கொண்டாட ஏற்பாடு செய்யுங்கள். என்னென்ன நிகழ்ச்சிகள் நடத்தலாம்? கலந்துரையாடுங்கள். கருத்துகள் எழுதி வெளியிடுங்கள்.



- கடல் மாசடைவதைத் தடுக்க நாம் உறுதி செய்வோம். உறுதி மொழியை எழுதிக் காலைக்கூட்டத்தில் வாசியுங்கள்.

**உறுதிமொழி**

கடல் நமது அன்னையைப் போன்றவள்.

அதை நாம் ஒவ்வொருவரும் நேசிக்க வேண்டும்.

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

- இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாக்க நாம் என்னென்ன முன்னெச்சரிக்கைகள் எடுக்கலாம்? கலந்துரையாடுங்கள்; கருத்துகளைக் கூறுங்கள்.

'கடல் மீனைத் தரும்' என்னும் வாக்கியத்தில் கடல், மீனை, தரும் என்பன அதன் உறுப்புகளாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களின் உறுப்புகளை அட்டவணையில் எடுத்து எழுதுங்கள்.

- கடல் மீனைத் தரும்.
- இளமாறன் பரிசு பெற்றான்.
- இந்துஜா பாடம் படிக்கிறாள்.
- அபுபக்கர் கணினி வாங்கினான்.
- நான் மாலுமியைப் பார்த்தேன்.

| கடல் | மீனை | தரும் |
|---|---|---|
| .......................... | .......................... | .......................... |
| .......................... | .......................... | .......................... |
| .......................... | .......................... | .......................... |
| .......................... | .......................... | .......................... |
| .......................... | .......................... | .......................... |
| .......................... | .......................... | .......................... |

மாதிரியைப் போன்று மாற்றி எழுதுங்கள்.

**எ.கா. :**

| | | |
|---|---|---|
| பொங்கும் கடல் | – | பொங்காத கடல் |
| உருகும் பனிக்கட்டி | – | .......................................... |
| மலரும் மலர் | – | .......................................... |
| ஒளிரும் மின்மினி | – | .......................................... |
| அழியும் அழகு | – | .......................................... |

**கீழ்வரும் கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புங்கள்.**

**எ.கா. :**

| | |
|---|---|
| நான் படித்தேன் | நாங்கள் படித்தோம் |
| அவன் பாடினான் | அவர்கள் ..................................... |
| அது ..................................... | அவைகள் ஓடின |
| சிறுவன் சிரித்தான் | சிறுவர்கள் ..................................... |
| பசு மேய்ந்தது | பசுக்கள் ..................................... |
| நான் ..................................... | நாங்கள் சென்றோம் |

**குறியீடு விளக்கம்**

ஒரு சொற்றொடரில் பொருள் முடிவு பெற்றதை உணர்த்துவதற்காக இடும் குறி முற்றுப்புள்ளி. **.**

ஒரு தொடரில் பொருள்கள் பல தொடர்ந்து வரும்போது இடம்பெறும் குறி காற்புள்ளி. **,**

ஒரு சொற்றொடரில் ஓர் எழுவாய், பல பயனிலைகளைப் பெற்று வரும்போது ஒவ்வொரு பயனிலையின் இறுதியிலும் இடம்பெறும் குறி அரைப்புள்ளி. **;**

வினாத்தொடரின் இறுதியில் இடம்பெறும் குறி வினாக்குறி. **?**

வியப்புப் பொருளை உணர்த்தும் சொல்லை அடுத்து இடம்பெறும் குறி வியப்புக்குறி. **!**

# 2

# பூமியின் பெருமூச்சு



மனிதனின் சுயநலத்தால் சுற்றுப்புறம் மாசடைந்துள்ளது. அன்றாடம் நாம் வீசியெறியும் கழிவுப் பொருட்களால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. அதனால் பல்வேறு நோய்கள் பரவுகின்றன. இதற்கு எதிரான விழிப்புணர்வு குழந்தைகளிடம் ஏற்பட வேண்டும் என்பன போன்றக் கருத்துகளைக் குழந்தைகள் பெறும் வகையில் இவ்வலகு அமைகிறது

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- சுகாதாரத்துடன் தொடர்புடைய கவிதைகளை வாசித்துக் கருத்தை உட்கொண்டு இராகம், தாளம், பாவனையுடன் பாடுகிறார்கள். பாடல் வரிகளுக்கு இரசனைக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- பொருத்தமான சூழல்களில் சுவரொட்டி, அறிவிப்புப் பலகை, மனுக்கள் எழுதி வெளியிடுகிறார்கள்.
- பத்திரிகைச் செய்திகள், நிகழ்ச்சிகள், பிரசுரங்கள் போன்றவற்றிற்குப் பொருத்தமான தலைப்பு எழுதுகிறார்கள்.
- படங்கள், காட்சிகள் ஆகியவற்றிற்குப் பொருத்தமான குறிப்புகள் எழுதி வெளியிடுகிறார்கள்.


# சுத்தம் காத்திடடா

ஈக்கள் கொசுக்கள் பறக்குதடா - அவை
எளிதாய் நோயைப் பரப்புதடா
தீக்குள் பிளாஸ்டிக் உருகுதடா - அது
தீயாய் நச்சை உமிழுதடா

குப்பை கூளம் குவியுதடா - அது
குமட்டும் நாற்றம் பரப்புதடா
குழியில் சாக்கடை நிறையுதடா - அதில்
நெளியும் புழுக்கள் வளருதடா

எங்கும் பிளாஸ்டிக் கிடக்குதடா- அது
என்றும் மக்கா திருக்குதடா
தங்கும் மண்ணில் இடம்பிடித்து - அது
தண்ணீர் ஊற்றை அடைக்குதடா





எச்சில் இலைகள் கிடக்குதடா - அவை
எங்கும் அழுகிக் குமட்டுதடா
நச்சாய்க் காற்றை மாற்றிடவே - அவை
நாற்றம் எங்கும் பரப்புதடா

சுற்றுப் புறத்தைக் காத்திடடா - அதைச்
சுத்தம் ஆக்கிப் பார்த்திடடா
வெற்றுக் குப்பிக் கழிவுகளை
விரைவாய் முறையாய் அகற்றிடடா

வீட்டுச் சுத்தம் காத்திடடா - உன்
வீதிச் சுத்தம் பேணிடடா
நாட்டுச் சுத்தம் போற்றிடடா - தினம்
நலமாய் உலகில் வாழ்ந்திடடா

- பிரதாப்

## செயல்பாடுகள்

- பாடலைப் பல்வேறு மெட்டுகளில் பாடுங்கள்.

- ஒரே ஓசையுடைய சொற்களைப் பாடலிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்

எ.கா. :

| | |
|---|---|
| பறக்குதடா | பரப்புதடா |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |

- தொடர்களைச் சரியான ஒலிப்புடன் வாசியுங்கள்.

• குப்பைக்கூளம்
• நெளியும் புழுக்கள்
• நச்சுக் காற்று
• வீட்டுச் சுத்தம்

• வெற்றுக்குப்பி
• எச்சில் இலைகள்
• சுற்றுப்புறம்
• வீதிச் சுத்தம்

- பொருத்தமான ஓரெழுத்துச் சொல்லை எழுதுங்கள்.

எ.கா. :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெருப்பு | : | தீ | மலர் | : | ........................ |
| கரம் | : | ........................ | பாடல் | : | ........................ |
| அரசன் | : | ........................ | பசு | : | ........................ |

(கோ, பா, கை, பூ, ஆ)

**பாடலை வாசியுங்கள். சுற்றுப்புறம் காக்க நீங்கள் என்ன செய்வீர்கள்? எழுதுங்கள்.**

சுற்றுச் சூழல் கெட்டுவிடாமல்
சுத்தம் காப்பது பொறுப்பாகும்
குப்பை கூளம் பெருகாமல்
குறியாய் இருந்து பெருக்கிடணும்

**(எ.கா:)**

- பொது இடத்தில் துப்பமாட்டேன்.
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

**உங்கள் பள்ளிக்கூடத்தில் குப்பைகளைப் போடக் குப்பைத் தொட்டிகள் வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஒரு மனு எழுதுங்கள்.**

தேதி : _ _ _ _ _

அனுப்புநர்

இடம் : _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _

பெறுநர்

_ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _

ஐயா,

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

நன்றி!

இவண்

(கையொப்பம்)

# இயற்கையின் முறையீடு

பூவரசி : சின்னமணிக் காத்து வந்து
கண்ணீர் விட்டது!

பூவரசன் : ஏன் கண்ணீர் விட்டது?

பூவரசி : தன்னுடம்பு முழுதுமதற்குக்
காயம் என்றது!

பூவரசன் : எதனால் காயம் என்றது?


பூவரசி : தொழிற்சாலைப் புகையாலும்,
மரந்தனை அழிப்பதாலும்
காற்று சேதமாச்சு!
அதன் உடம்பு காயமாச்சு!

பூவரசன் : ஓஹோ,,,,, அப்படியா!

பூவரசி : கெட்ட காத்த நாம் விடுவோம்,
நல்ல காத்த நாம் எடுப்போம்,
நல்ல காத்த மரந் தந்து
கெட்ட காத்த எடுத்துக்கும்!

பூவரசன் : அப்படிப்போடு ,,,,,சபாஷ்,,,,

பூவரசி : வானின் மேகம் ஓடிவந்து
தாகம் என்றது!



பூவரசன் : ஏன் தாகம் என்றது?

பூவரசி : மனிதன் போட்ட அணுகுண்டாலே
சோகம் என்றது!

பூவரசி : கடலும் அலைக் கைகளாலே
வயிற்றில் அடித்தது!

பூவரசன் : ஏன் வயிற்றில் அடித்தது!

பூவரசி : அடிவயிற்றில் அணுகுண்டு
வைத்தான் என்றது!

பூவரசன் : ஐயோ வைத்தான் என்றது!

பூவரசி : அதனாலே தன் வயிறு
வலிக்கு தென்றது!

பூவரசன் : ஐயோ வலிக்கு தென்றது!

பூவரசி : பூமி விடும் மூச்சுகூட
பூகம்ப மானது!

பூவரசன் : ஏன் பூகம்பமானது?

பூவரசி : அணுகுண்டு சோதனையால்
துடித்துப் போனது!





பூவரசன் : அது துடித்துப் போனது!

பூவரசி : பொறந்துவரும் புள்ளைகூடக்
கூன் குருடாய் ஆகுது!

பூவரசன் : ஏன் குருடாய் ஆகுது?

பூவரசி : அணுகுண்டு விஷத்தாலே
அந்தச் சேதமாகுது!

பூவரசன் : அட ரொம்பச் சேதமாகுது!

பூவரசி : வளரும் பயிரும் பாதியிலே
கருகிப் போகுது

பூவரசன் : ஏன் கருகிப் போகுது?

பூவரசி : நிலம் வான் காற்று
விஷமானதாலே ஆகுது!

பூவரசன் : விஷமானதாலே ஆகுது!

பூவரசி : ஆலைவிடும் புகைதடுக்கக்
காற்று சொன்னது!

பூவரசன் : ஆஹா காற்று சொன்னது!

பூவரசி : மரத்தை வெட்டாதே
மேகம் சொன்னது!

பூவரசன் : அந்த மேகம் சொன்னது

பூவரசி : அணுகுண்டை வைக்காதே
நிலமும் சொன்னது

பூவரசன் : இந்த நிலமும் சொன்னது

பூவரசி : தண்ணீரை விஷமாக்காதே
கடலும் சொன்னது!

பூவரசன் : நீலக் கடலும் சொன்னது!






## செயல்பாடுகள்

- பாடலை இருவராகப் பாடி நடித்துக்காட்டுங்கள்.
- பேச்சு வழக்குச் சொற்களைத் திருந்திய வடிவில் எழுதுங்கள்.
  - தென்றல் **காத்து** மெல்ல வீசிப் போனது.
  - சிறு **புள்ளை**கள் கைவீசி நடந்தார்கள்.
  - புயல் வீசியதால் தோணியெல்லாம் **சேதமாச்சுது.**
  - கால் தடுக்கி விழுந்ததால் உடல் **முழுதும் காயமாச்சுது.**

- வாயுமண்டலத்தைப் பாதுகாக்க அறிவிப்புப் பலகை தயார் செய்யுங்கள்




- படங்களுக்குப் பொருத்தமான குறிப்பு எழுதுங்கள்





# விழிப்புணர்வு முகாம்


**இடம் : ஊராட்சி ஒன்றியக் கலையரங்கம், வேலங்காடு**
**தேதி : 6-7-2015**
**நேரம் : காலை 10 மணி**

அன்பார்ந்த பொதுமக்களே!

நமது பகுதியில் யானைக்கால், மலேரியா, டெங்கு காய்ச்சல், சிக்குன் குனியா, போன்ற நோய்கள் பரவி வருகின்றன, இவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான வழிகளைக் குறித்த விழிப் புணர்வு முகாம் நமது ஊராட்சி ஒன்றியக் கலையரங்கத்தில் நடைபெறுகிறது. இம்முகாமில் அரசு மருத்துவர் திரு.அலெக்சாண்டர் விளக்கம் தருகிறார். பொதுமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன் புடன் அழைக்கிறோம்.

**இப்படிக்கு,**
**க.ஆனந்தராஜ்,**
தலைவர்,
வேலங்காடு,
கிராமப் பஞ்சாயத்து.

இடம் : வேலங்காடு,
தேதி : 4-7-2015.



## செயல்பாடுகள்

**விழிப்புணர்வு முகாம் நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரலை நிரப்புங்கள்.**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| இறை வணக்கம் | : | ____________________ |
| தலைவர் | : | ____________________ |
| வரவேற்புரை | : | ____________________ |
| வகுப்பு நடத்துபவர் | : | ____________________ |
| நன்றியுரை | : | ____________________ |
| தேசிய கீதம் | : | ____________________ |

**விழிப்புணர்வு முகாமைப் பற்றிய பத்திரிகைச் செய்தி எழுதுங்கள்.**

வேலங்காடு : ஜூலை 7

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**இணைத்துச் சொல்லுங்கள்; எழுதுங்கள்.**

**எ.கா. :**

- குப்பைகள் குவிந்தன. கொசுக்கள் பெருகின.
  குப்பைகள் குவிந்ததால் கொசுக்கள் பெருகின.
- சாக்கடைக் குழாய் உடைந்தது. தெருவெல்லாம் அசுத்தமானது.
  ________________________________________
- கொசு கடித்தது. கண்ணனுக்குக் காய்ச்சல் வந்தது.
  ________________________________________
- காற்று வீசியது. மரங்கள் ஒடிந்து விழுந்தன.
  ________________________________________
- மழை பெய்தது. குளங்கள் நிரம்பின.
  ________________________________________

# மீண்டும்! மீண்டும்!



அப்பா எழுதிக் கொண்டிருந்தார். அப்போது, காபி கொண்டு வந்தாள் அம்மா.

அடடா... மை தீர்ந்து போச்சே! என்று பேனாவைக் குப்பைத் தொட்டியில் தூக்கிப்போட்டார்.

“ஏன் குப்பையில் போட்டீங்க” என்று கேட்டார், அம்மா.

“பயன்படுத்தி வெளியே எறியக்கூடிய... பவுடர் டப்பா, பற்பொடி டப்பா, இப்படிப் பலவற்றையும் தூக்கித்தானே எறியறோம்” என்றார், அப்பா.

அப்போது அங்கு வந்த அகிலன், எதையுமே தூக்கி எறியாமல் இருக்க ஐடியா பண்ணலாமே! என்று சொன்னான்.





சிறிது நேரத்தில் அகிலன்.... காலி பற்பொடி டப்பா, பேனா, பவுடர் டப்பா, தேங்காய் எண்ணெய் டப்பா, பாலிஷ் டப்பா அனைத்தையும் கொண்டு வந்து மேசையின் மீது வைத்தான். இதைப் பார்த்தவுடனே அம்மா, “என்னடா செய்ய போற”? என்று கேட்டார். கொஞ்சம் நேரத்திற்குத் தொந்தரவு செய்யாதீர்கள் என்று தன் வேலையில் மூழ்கினான் அகிலன்.

எல்லோரும் இங்கே வாங்க, எதையும் தூக்கி எறிய வேண்டாம். இதோ காலியான இரண்டு பற்பொடி டப்பாக்கள். நன்றாகச் சுத்தம் செய்துவிட்டு, மூடியில் துளை போட்டுவிட்டேன். இப்போது சாப்பாட்டு மேசைமீது மிளகுப் பொடி, உப்பு போடும் டப்பாக்களாக மாற்றியுள்ளேன் என்று எல்லோருக்கும் காண்பித்தான்.





அடுத்தது, அகிலன், தன் தங்கையிடம் இது பயன்படுத்திவிட்டு வெளியே எறியும் பேனா. ஏற்கனவே சீவிச்சீவிச் சின்னதாகிப்போன பென்சிலைப் பேனாவின் அடிப்பக்கத்தில் செருகி இருக்கிறேன். நன்றாகப் பிடித்து எழுதலாம் என்றான்.

அடுத்தது, பவுடர் டப்பாவின் மூடியைக் கழற்றிப் போட்டுவிட்டு, வண்ணச்சாயத்தை அடித்தேன் என்று பவுடர் டப்பாவைக் காண்பித்தான்.
ஆஹா, அழகான பென்சில் டப்பாவாக மாறிவிட்டதே என்றபடி அதை வாங்கிக் கொண்டாள் தங்கை.





அப்போது அப்பா, எண்ணெய் பாட்டிலைப் பார்த்து, இது என்ன என்று கேட்டார்.
இது தேங்காய் எண்ணெய் பாட்டில். எண்ணெய் காலியானதும் தூக்கி எறிய வேண்டாம். ஏதேனும் சாஸ் ஊற்றிப் பெரிய துளை போடுங்க. இந்த சாஸ் டப்பா, சாப்பாட்டு மேசைக்குப் பயன்படும் என்றான் அகிலன்.

இது செருப்புகளுக்குப் பாலிஷ் போடும் காலி டப்பா. இதில் ஸ்பாஞ்சை ஒட்டி, குண்டூசி டப்பாவாக மாற்றிவிட்டேன் என்றவுடன், சூப்பர் ஐடியா, கலக்கிட்ட என்று அப்பா பாராட்டினார். கொஞ்சம் யோசிச்சா, எதையும் பயன்படும் விதமா மாற்றலாம் என நிரூபிச்சிட்டா அகிலா. வெரிகுட், என்று அம்மாவும் பாராட்டினார்.



**தண்ணீர்க் குடுவை, உறிஞ்சு குழல் இவை கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

# வருமுன் காப்போம்

செந்தில், செல்வன் ஆகியோர் இருவரும் இணைபிரியாத நண்பர்கள். இருவரும் மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள்.

செந்தில் மிகவும் நல்ல சிறுவன். உறுதியான உடல் உடையவன். அவன் அன்றாட வேலைகளை ஒழுங்காகச் செய்வான். பள்ளிக்கும் ஒழுங்காகப் போவான். பாடங்களை நன்றாகக் கவனித்துப் படிப்பான். படிப்பிலும் விளையாட்டிலும் அவன் முதல்வனாக விளங்கினான்.

செல்வன் ஒழுங்காகப் பள்ளிக்குப் போவதில்லை. அவன் உடல் மெலிந்திருக்கும். படிப்பில் ஆர்வமில்லை. கையில் கிடைக்கும் காசைக் கொண்டு தெருவில் விற்கும் பண்டங்களை அடிக்கடி வாங்கித் தின்பான். ஈக்கள் மொய்க்கும் பண்டங்களை வாங்கித் தின்பதால் அடிக்கடி அவனுக்குக் காய்ச்சல் வரும்.

ஒருநாள் செல்வன் காய்ச்சலால் துன்பப்பட்டான். தேர்வு நேரமாதலால் அவன் பள்ளிக்குப் போக இயலவில்லை. செந்தில் அவனைப் பார்க்கச் சென்றான். காய்ச்சலால் சோர்ந்து போயிருந்த செல்வன் தன் நண்பனை அன்போடு வரவேற்றான். செந்தில், செல்வனின் நிலையைக் கண்டு வருந்தினான். செல்வனின் தாயார்,



“தம்பி! தேர்வு நேரத்திலும் இவன் இப்படிக் காய்ச்சலால் துன்பப்படுகிறானே! என்ன செய்வது! இவன் ஒழுங்கான நேரத்தில் உணவு உண்பதில்லை; வீட்டில் ஒரு வேலையும் செய்வதில்லை; ஓடியாடி விளையாடுவதும் இல்லை; தெருவில் விற்கும் பண்டங்களை அடிக்கடி வாங்கித் தின்கிறான். அதனால், நோயை விலை கொடுத்து வாங்கிக்கொண்டதுபோல இப்படிக் காய்ச்சலால் துன்பப்படுகிறான்” என்று கூறிக் கண்ணீர் சிந்தினார்.

அப்போது அறையில் ஒருவர் இருமும் ஒலி கேட்டது. செந்தில் அந்த அறையை எட்டிப் பார்த்தான். செல்வனின் தாயார் அவனைப் பார்த்து, தம்பி! அவர் செல்வனின் தந்தையார். அடிக்கடி புகைபிடிக்கும் பழக்கம் உடையவர். அதனால், இப்போது காசநோயால் துன்புறுகிறார். அவர் அப்படியென்றால், இவனும் இப்படிக் கெட்டுவிடுகிறானே! என்றைக்குத்தான் நல்ல புத்தி வருமோ? என்று ஏக்கத்துடன் கூறினார்.

செந்தில், செல்வனின் தந்தையாருக்குக் காசநோய் என்பதைக் கேட்டதும் திடுக்கிட்டான்; புகைபிடித்தால் காசநோய் வருமா, அம்மா? என்று செல்வனின் அன்னையாரைக் கேட்டான்.


காசநோய் மட்டுமன்று; புற்றுநோயும் வரும். இதையறிந்தும் புகைபிடிக்கப் பழகியவர்கள் அதனைக் கைவிடமுடியாமல் நோய்க்கு ஆளாகின்றனர். அதனால், செல்வனின் தந்தையாரும் இந்த நிலையில் இருக்கிறார், என்று அவன் தாயார் கூறினார். இப்படிக் கூறியபோது அவர் கண்களில் பொலபொலவென்று கண்ணீர் சிந்தியது. அன்னையாரின் துன்பத்தைக் கண்டு மிகவும் வருந்தினான்.



மருந்து ஏதேனும் சாப்பிடுவது இல்லையா என்று செந்தில் கேட்டான். மருந்து சாப்பிடுகிறார்; ஊசியும் போட்டுக் கொள்கிறார். நோய் முற்றாமல் இருப்பதால் விரைவில் குணமாகிவிடுவார் என்று மருத்துவர் கூறுகிறார் என்றார் அன்னையார். செந்தில், நல்லது அம்மா! இனி அவருக்குச் சரியாகி விடும். செல்வனும் நன்றாக வேண்டும். நான் உணவு உண்ணும் நேரம் தவிர மற்ற நேரங்களில் நொறுக்குத் தீனி உண்பதில்லை; நாள்தோறும் உடற்பயிற்சியும் செய்கிறேன். மாலையில் விளையாடுகிறேன். என் தந்தையார் மருத்துவரிடம் அழைத்துச் சென்று தடுப்பு ஊசிகளைத் தேவையான நேரத்தில் போடச் செய்வார். எங்கள் குடும்பத்தில் யாரும் நோயால் படுப்பதில்லை.

வருமுன் காப்பது நல்லது, என்று செல்வன் கூறினான்.

செல்வன் செந்திலின் பேச்சைக் கேட்டான். தன் அன்னையாரின் துன்பநிலையையும் உணர்ந்தான். அவனது உள்ளம் உருகியது. அவனுக்குப் புத்தி வந்தது. 'அம்மா! இனி நான் தவறான பழக்கங்களில் ஈடுபடமாட்டேன். தெருவில் விற்கும் தின்பண்டங்களை வாங்கித் தின்ன மாட்டேன். ஒழுங்காக உடற்பயிற்சி செய்வேன். மாலையில் விளையாடுவேன்', என்று உறுதி கூறினான். செல்வனின் உறுதிமொழியைக் கேட்ட தாயார் மகிழ்ச்சியடைந்தார். இருவரையும் மனதார வாழ்த்தினார்.





## செயல்பாடுகள்

**செல்வன் அம்மாவுக்கு அளித்த வாக்குறுதி என்ன? பாடப்பகுதியை வாசித்துக் கூறுங்கள்.**

**பொருத்தமான வினாத்தொடர் எழுதுங்கள்.**

**எ.கா. :**

- செந்திலும் செல்வனும் மூன்றாம் வகுப்பில் படிக்கிறார்கள் **(எந்த)**
  செந்திலும் செல்வனும் **எந்த** வகுப்பில் படிக்கிறார்கள்?
- செல்வன் ஈ மொய்க்கும் தின்பண்டங்களை வாங்கித் தின்பான் **(எப்படிப்பட்ட)**
  ______________________________
- செல்வன் காய்ச்சல் வந்ததால் பள்ளிக்குச் செல்லவில்லை **(ஏன்?)**
  ______________________________
- செல்வனின் அப்பா காச நோயால் அவதிப்பட்டார் **(என்ன)**
  ______________________________
- காச நோயும் புற்றுநோயும் புகைபிடிப்பதால் ஏற்படுகின்றன **(எதனால்?)**
  ______________________________
- செந்தில் மாலையில் பந்து விளையாடுவான் **(என்ன?)**
  ______________________________
- வகுப்பில் முதல் மாணவனாகச் செந்தில் விளங்கினான் **(யார்?)**
  ______________________________

**சரியான தொடரை எழுதி வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.**

- மாலா ........................ சிரித்தாள்.
- ஓடையில் தண்ணீர் ........................ ஓடியது
- அரிசி முறுக்கு ........................ இருந்தது
- கவிதா கவிதையை ........................ வாசித்தாள்
- கண்ணன் ........................ கண்ணீர் வடித்தான்.

**(பொலபொலவென, மளமளவென, சலசலவென, கலகலவென, மொறுமொறுவென)**

**பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுங்கள்.**

- ........................ மீன் வலையில் விழுந்தது.
- ........................ மாடுகள் புல்லை மேய்ந்தன.
- ........................ மான் தப்பியது.
- ........................ மக்கள் கலைந்தனர்.
- ........................ பொருள் கிடைத்தது.
- ........................ காகம் பறந்தது.
- ........................ பாடல் முடிந்தது.

**கூடிய**
**பாடிய**
**ஓடிய**
**கரைந்த**
**தேடிய**
**வந்த**
**துள்ளிய**

**ச, சா, சி வரிசையில் எழுதுங்கள்.**

| | | |
|---|---|---|
| **சூரியன்** | **செங்கடல்** | **சாரதி** |
| **சேவல்** | **சோதனை** | **சொந்தம்** |
| **சிறை** | **சமுத்திரம்** | **சுண்ணாம்பு** |

| | | |
|---|---|---|
| 1. சமுத்திரம் | 4. ........................ | 7. ........................ |
| 2. ........................ | 5. ........................ | 8. ........................ |
| 3. ........................ | 6. ........................ | 9. ........................ |

**நிறுத்தற் குறியீடுகள் இடுங்கள்.**

- பாத்திமா சேவியர் இருவரும் கதை எழுதிக்கொண்டிருந்தனர்.
- சுவரின் மீது சாணத்தை எறிந்தது யார்
- ஐயோ அம்மா என்று ஓலமிட்டான்
- முல்லை மலர் எவ்வளவு அழகாக இருக்கிறது
- என்ன மீன் பேசியதா அதிசயமாக இருக்கிறதே

. ; , ? !

# 3

# தாய் மண்ணே, வணக்கம்!



பாரதத்தில் சாதி, மத, இன பேதமின்றி நாம் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்கிறோம். நாட்டில் எல்லாத் துறைகளிலும் நாம் இதைக் கண்கூடாகப் பார்க்கலாம். அப்படிப்பட்ட ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் குழந்தைகள் பேணிக் காக்க வேண்டும் இவை போன்ற கருத்துகளைக் குழந்தைகள் பெறும் வண்ணம் இவ்வலகு அமைகிறது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- முக்கிய நிகழ்ச்சிகளில் முத்திரை வாக்கியங்கள், அழைப்பிதழ்கள் தயாரித்து வெளியிடுகிறார்கள்.
- பிரபலமானவர்களிடம் பேட்டிக் காண்பதற்கு வினாநிரல் தயாரிக்கிறார்கள்.
- சொந்தக் கருத்துகளைப் பொருத்தமான சூழல்களில் இயைந்த மொழிநடையில் பல்வேறு மொழிவெளியீட்டு வடிவங்களில் வெளியிடுகிறார்கள்.
- குறிப்புகளின் அடிப்படையில் படம் வரைந்து வண்ணம் தீட்டுகிறார்கள்.
- தனது படைப்புடன் பிற படைப்புகளையும் உட்படுத்தி, பதிப்பு உருவாக்கி வெளியிடுகிறார்கள்.



# பொங்கும் ஒருமை

கன்னியா குமரியும் காஷ்மீரும்
　　கண்டிடும் பாரத எல்லையல்லோ!
உன்னிடின் மத்தியப் பிரதேசம்
　　உத்தமத் தாயவள் இதயமலோ!
மின்னிடும் தென்னையும் தேயிலையும்
　　மெச்சிடும் கேரளக் குழந்தையன்றோ!
பொன்னினும் மேலெனக் கோதுமையும்
　　பொலிவுடைப் பஞ்சாப் கொடையன்றோ!

செங்கல் இடையே சாந்திட்டுச்
　　செறிவாம் கட்டடம் கட்டுதல்போல்
பொங்கும் ஒருமையின் உணர்வதனை
　　பொருளால் படைத்திட இயன்றிடுமோ?
அங்கம் முழுவதும் அகமுழுதும்
　　அருமைத் தாயக உணர்வேதான்
தங்கம் போலவே தாங்கிவிடின்
　　தரமாய் ஒருமையும் மிளிராதோ?

- பத்மகவி. குற்றாலதாசன்

## செயல்பாடுகள்

- **பாடலை இராகத்துடன் குழுவாகவும் தனியாகவும் பாடுங்கள்.**
- **தேச ஒற்றுமையை வலியுறுத்தி ஊர்வலம் செல்வதற்கு முத்திரை வாக்கியங்கள் தயார் செய்யுங்கள்.**

எ.கா. :

- மனிதரில் ஒற்றுமை வேண்டும்! வேண்டும்!
- _______________________
- _______________________
- _______________________
- _______________________

- **சரியான எழுத்தைக் கண்டறிந்து எழுதுங்கள்**

கு__ந்தைகள் நம் நாட்டின். க__கள் அவர்கள் வ__ர்ந்து வரும் நாளைய த__வர்கள். தோ__மையுடன் கடமையைச் செய்வது நன்று. அவர்களிடம் வேற்__மையை உ__வாக்காமல் ஒற்றுமையுடன் வா__ம் வழிகளை எடுத்துக் கூற வேண்டும். அப்படியென்றால் அவர்கள் வி__ங்குகளைப் போல் அல்லாமல் மகி__ச்சியுடன் இந்த நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அ__த்துச் செல்வர். தவ__களை ம__ப்போம் மன்னிப்போம்.

(ற, ண், லை, ழ, று, ழை, ள, ரு, ல, ழ்)

- **பள்ளியில் நடைபெறும் சுதந்திர தினவிழா நிகழ்ச்சி நிரலை வரிசைப்படுத்துங்கள்**



- இனிப்பு வழங்குதல்
- கொடியேற்றுதல்
- இறைவணக்கம்
- வாழ்த்துரை
- கொடிப்பாடல்
- தேசிய கீதம்
- பரிசளிப்பு
- உறுதி மொழி

■ இரண்டாம் எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுங்கள்.

**எ.கா. :**

| | |
|---|---|
| செங்கல்<br>பொங்கும் | ___________<br>___________ |
| ___________<br>___________ | ___________<br>___________ |

■ உங்கள் பள்ளியில் நடைபெறும் சுதந்திர தின விழாவிற்கு அழைப்பிதழ் ஒன்று தயார் செய்யுங்கள்.



## சுதந்திர தினவிழா

### அழைப்பிதழ்

இடம் : ___________

தேதி : ___________

நேரம் : ___________

அன்புடையீர்!

______________________________

______________________________

______________________________

______________________________

இவண்

# கபடி

கபடி விளையாட்டு தமிழ்நாட்டில் காலங்காலமாக விளையாடும் விளையாட்டு. இதற்குச் சடுகுடு என்று மற்றொரு பெயரும் உண்டு. தமிழ் நாட்டுக்கு வெளியே இந்தியாவின் சில பகுதிகளிலும் தெற்காசிய நாடுகளிலும் கபடி ஆடப்படுகிறது. 2004 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கபடிக்காக உலகக்கோப்பைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஆசிய விளையாட்டுப் போட்டியில் கபடி சேர்க்கப்பட்டுள்ளது. இதில் பெண்கள் அணியினரும் கலந்து கொள்கின்றனர்.

**கபடி கபடி** என்று பாடுவதற்குப் பதிலாகக் கிராமப்புறங்களில் பாட்டாகப் பாடுவதும் உண்டு.


நாந்தான் வீரன்டா
நல்லமுத்துப் பேரன்டா
வெள்ளிச் சிலம்பெடுத்து
விளையாட வாரேன்டா
தங்கச் சிலம்பெடுத்து
தாவிகாட்ட வாரேன்டா
வாரேன்டா வாரேன்டா



இவ்விளையாட்டு இரண்டு அணிகளுக்கு இடையே நடக்கும். ஒவ்வொரு அணியிலும் ஏழுபேர் இருப்பார்கள். மொத்த விளையாட்டு நேரம் 40 நிமிடம். கீழே விழுந்தால் அதிகம் பாதிப்பு ஏற்படாதிருக்க மணல் பரப்பிய தரையில் இவ்விளையாட்டு நடைபெறும். செவ்வக வடிவில் வெளிக்கோடிட்ட ஆடுகளம் பயன்படுத்தப்படும். நடுவில் கோடு போட்டு இரண்டாகப் பிரிப்பார்கள். இந்தக் கோட்டிற்கு நடுக்கோடு என்று பெயர். நடுக்கோட்டிற்கும் வெளிக்கோட்டிற்கும் இணையாக இன்னொரு கோடு இருக்கும். அதற்கு ஏறுகோடு என்று பெயர். ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு பக்கம் ஒதுக்கப்படும். இரு அணி வீரர்களும் அவரவர் பக்கத்தில் ஏறு கோட்டிற்கு அருகில் நிற்பர்.

தொடங்கும் அணி சார்ந்த ஒருவர் நடுக்கோட்டிலிருந்து அடுத்த அணியினரை நோக்கிக் கபடி கபடி எனச் சொல்லிச் செல்வர். இதற்குப் பாடிச் செல்லுதல் என்று பெயர். அவர் நடுக்கோட்டைக் காலால் தொட்டு விட்டோ அதைக் கடந்து போய்விட்டோ திரும்ப வந்து குழுவில் சேர்ந்து கொள்வர்.இடையில் அவர் எதிரணிக்காரர் யாரையாவது தொட்டுவிட்டு நடுக்கோட்டை அடைந்து விட்டால் அவருடைய அணிக்கு ஒரு புள்ளி கிடைக்கும். அவரால் தொடப்பட்டவர் வெளியேற்றப்பட்டு நடுக்கோட்டிற்கு வருமுன் எதிர் அணியினர் பிடித்து நிறுத்தி விட்டால் அவர் வெளியேற வேண்டும். இப்பொழுது எதிரணிக்கு ஒரு புள்ளி கிடைக்கும். தொடர்ந்து அடுத்த அணியிலிருந்து ஒருவர் பாடிச் செல்வார். ஒரு அணியிலிருந்து ஒருவர் வெளியேறும்போது எதிர் அணியினர் வெளியே இருந்தால் அவர்களுள் முதலில் வெளியே வந்தவர் உள்ளே சென்று விடலாம். ஆட்ட நேர முடிவில் எந்த அணி அதிகம் புள்ளிகள் பெற்றதோ அதற்கு வெற்றி.

கபடி ஆடுகளம்



## செயல்பாடுகள்

- நமது இந்திய அணி 2014ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றது. அந்த அணியினரைப் பேட்டி காண்பதற்குரிய வினாநிரலைத் தயாரியுங்கள்.

எ.கா. :

- தங்கள் அணியில் எத்தனைபேர் உள்ளனர்?
- ______________________?
- ______________________?
- ______________________?

- இரு குழுவாகப் பிரிந்து கபடி விளையாடுங்கள்.

- ஒரு தேசிய விளையாட்டைப் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

காற்பந்து | கிரிக்கெட் | ஹாக்கி

- பத்திரிகைகளிலிருந்து விளையாட்டுகளின் படங்களைத் திரட்டி மலர் வெளியிடுங்கள்.



# இப்படியும் மனிதர்கள்

ஒரு கிராமத்தில் இரண்டுபேர், பக்கத்துப் பக்கத்துக் குடிசையில் வாழ்ந்தனர். இரண்டுபேரும் தோட்டத்தில் வாத்துகளை வளர்த்து வந்தனர். இரண்டு பேருக்கும் சண்டையாதலால், இந்த வாத்துகளையும் ஒன்றையொன்று அண்ட விடாமல் இரண்டடி உயரத்திற்கு வேலிபோட்டு அடைத்து வைத்திருந்தனர். இந்த வாத்துகள் ஒன்றையொன்று பார்த்து விசனமாகப் பேக்.... பேக்... என்று கத்தின.

அவை கத்துவது எப்படி இருந்ததெனில், ஐந்தறிவுள்ள நாமே ஜாதி, மத பேதமின்றி மகிழ்ச்சியாக வாழ்கிறோம். ஆனால் இந்த ஆறறிவு படைத்த மனித இனம் மட்டும் ஜாதி, மத பேதங்களால் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டு,வெட்டி மாய்த்துக்கொண்டு அவர்களும் சேராமல், நம்மையும் சேரவிடாமல் பிரித்து விடுகிறார்களே, இது என்ன அநியாயம்! எனப் பேசுவதுபோல் இருந்தது.

ஒரு நாள் சோவென மழை கொட்ட ஆரம்பித்தது. எங்கும் தண்ணீர் தேங்க



ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் மட்டம் உயர ஆரம்பித்தது. இரண்டடிக்கு மேல் தண்ணீர் வந்ததும், வேலி மூழ்க ஆரம்பித்தது. வேலிக்கு மேல் தண்ணீர் வந்ததும், வாத்துகள் மிதக்க ஆரம்பித்தன. இப்பொழுது பிரிக்க வேலியில்லை.

ஆகவே இரண்டு வீட்டு வாத்துகளும் ஆனந்தமாக நீரில் நீச்சலடித்துக் கொண்டே மகிழ்ச்சியாகப் ‘பேக்... பேக்...’ எனக் கத்தின. இப்பொது அவை கத்துவது எப்படியிருந்ததெனில், எங்களைச் சேர்க்க இந்த மழை வந்தது போல, ஒரு புயலோ, மழையோ, சுனாமியோ, பூகம்பமோ வந்தால்தான் இவர்கள் ஒன்றாய்ச் சேர்வார்களோ என்பது போல் இருந்தது.

ஆர்.ஜி.கேப்ரியேல்



## செயல்பாடுகள்

- மழை வந்து தண்ணீர் தேங்கவில்லை எனில் வாத்துகள் ஒன்று சேர ஏதாவது வழிகள் உள்ளனவா? உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.

- மாதிரியைப் போன்று வாக்கியம் அமைப்போம்.

**எ.கா. :**

பக்கத்துப் பக்கத்து

- புறாவும் காகமும் பக்கத்துப் பக்கத்து மரங்களில் வாழ்ந்தன.

பாடிப்பாடி

- ______________________________

தோண்டத் தோண்ட

- ______________________________

போற்றிப்போற்றி

- ______________________________

அடுத்தடுத்து :

- ______________________________

துடித்துத் துடித்து

- ______________________________

- குறிப்புகளின் அடிப்படையில் படம் வரைந்து நிறம் கொடுங்கள்.

குறிப்பு : வாத்துகள் தண்ணீரில் நீந்திச் செல்லும் காட்சி.



# எல்லோரும் சமம்


கோழி ஒன்று முட்டையிட்டுக்
குஞ்சுகள் பத்து பொரித்ததுவாம்
பூப்போல் அந்தக் குஞ்சுகளைப்
போற்றிக் காத்து வளர்த்ததுவாம்
பாசத்தோடு உணவினையும்
பகிர்ந்து சமமாய் அளித்ததுவாம்
புசித்தால் சமமாய்ப் புசித்திருக்கும்
பசித்தால் சமமாய்ப் பசித்திருக்கும்
இப்படி வாழ்வை வகுத்தனவாம்
எல்லாம் வளர்ந்து பருத்தனவாம்
ஒருநாள் நண்பகல் வேளைவரை
உணவே யார்க்கும் கிடைக்கவில்லை



பசியால் எல்லாம் துடித்தனவாம்
பத்தும் கண்ணீர் வடித்தனவாம்
தத்தம் போக்கில் தரைகிளறித்
தம் பசிக்குணவைத் தேடினவாம்


அவற்றுள் ஒன்றின் முயற்சியினால்
அரைமுழ மண்புழு கிடைத்ததுவாம்
தான் கண்டெடுத்த உணவதனைத்
தனியே உண்ண முனைந்ததுவாம்

ஒன்பது குஞ்சுகள் பசித்திருக்க
ஒன்று மட்டும் புசித்திருக்கப்
பார்த்து தாயும் சினந்ததுவாம்
பறந்து குஞ்சிடம் விரைந்ததுவாம்



கூர்அலகால் அதைக் கொத்தியதாம்
குஞ்சின் உணவைப் பற்றியதாம்
பத்தாய்ப் புழுவைப் பற்றியதாம்
பத்துக்கும் உணவைக் கொடுத்ததுவாம்
உழைப்பதைச் சமமாய் உழையுங்கள்
உண்பதைச் சமமாய் உண்ணுங்கள்
பலரும் பட்டினி கிடக்கையிலே
சிலரே உண்பதை ஒழியுங்கள்
என்றே தாயும் சொன்னதுவாம்
எல்லாம் ஒப்புக் கொண்டனவாம்
தாயின் இந்த அறிவுரைகள்
தவறா? சொல்வீர் தம்பிகளே!

-தண்டரை முகில்வண்ணன்



## செயல்பாடுகள்

- கதைப்பாடலைப் பாடி மகிழுங்கள்.

- பாடலிலுள்ள கதையை எழுதுங்கள்.

கோழி ஒன்று பத்து குஞ்சுகள் பொரித்து வாழ்ந்து வந்தது ____________
______________________________________________
______________________________________________
______________________________________________

- பாடலிலிருந்து ஒரே ஓசையுடைய தொடர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

| | |
|---|---|
| பொரித்ததுவாம் | வகுத்தனவாம் |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |

- குழுவில் பொருந்தாத பெயரைத் தனியே எடுத்து எழுதுங்கள், காரணம் கூறுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| காகம் | கோழி | குயில் | கொக்கு | ________ |
| காற்று | மண் | மரம் | மனை | ________ |
| ஓலை | இலை | கீற்று | பாய் | ________ |
| குளம் | கடல் | ஏரி | ஆறு | ________ |
| கூடு | குகை | வீடு | பொந்து | ________ |

# 4

# உழவனின் கையில்



உழைப்பு ஒன்று தான் நம்மை உயர்த்தும். நம் நாட்டைப் பாரில் உயரச் செய்யும். உழைப்பின் பெருமையை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். உழைப்பவர்க்கே உண்ணும் உரிமை உண்டு என்னும் கருத்துகள் குழந்தைகள் பெறும் வகையில் இவ்வலகு அமைகிறது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- நாட்டுப்புறப் பாடல்களை வாய்தாரைகளுடன் ஒலிஅழகு, இசையழகு பொருந்த பாடுகிறார்கள்.
- கேட்டறிந்த கதைகளைச் சொந்த நடையில் கூறுகிறார்கள். குறிப்புகளின் அடிப்படையில் எழுதி வெளியிடுகிறார்கள்.
- கருத்துகளைப் புரிந்துகொண்டு வாக்கியங்களைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தி அமைக்கிறார்கள்.
- உழைப்புடன் தொடர்புடைய கவிதைகளை வாசித்து இராக, தாள, பாவனையுடன் பாடுகிறார்கள். பாடல்கள் படைக்கிறார்கள்.
- பழமொழிகள், விடுகதைகள் இவைகளின் கருத்தறிந்து பொருத்தமான சூழல்களில் கையாளுகிறார்கள்.

# கதிரறுக்கும் காலம்



உழைப்பவர்கள் வாழ்விலே
ஓங்கவேணும் வெற்றியே
அழைப்பிதழோ நெஞ்சிலே
அச்சேற்றும் நாளிதே

கதிரறுக்கும் ராசாத்தி
காலமுந்தான் வந்தாச்சி
பசியெடுத்த கூட்டமெல்லாம்
பக்கம் பக்கம் சேர்ந்தாச்சி

நெத்தெடுக்கும் மீனம்மா
நெலமையென்ன சொல்லம்மா
வத்தலாகித் தேய்வதுதான்
வாழ்வினிலே ஞாயமா?



நாத்துநட்டுக் கதிரறுத்துக்
கட்டு சொமந்தோமே
கூத்து செய்யும் பேர நம்பிக்
கும்பி பசிச்சோமே

ஏலமலை ஏறினாலும்
ஏழ்மைநிலை மாறுச்சா?
எத்தனை பாடுபட்டும்
பட்டகடன் தீர்ந்துச்சா?

ஆளான பிள்ளைகளை
அழகுபார்க்க ஆகவில்லை
பாழாய் வறுமைகொத்தப்
பண்பாடு, நீதியில்லே

**- சங்கை வேலவன்**

## செயல்பாடுகள்

■ பாடலை வாய்த்தாரையாகப் பாடுங்கள்.

■ பேச்சு வழக்கு வார்த்தைகளைத் திருந்திய வடிவில் எழுதுங்கள்.

எ.கா. :

| | | |
|---|---|---|
| ❀ ஓங்கவேணும் | - | ஓங்கவேண்டும் |
| ❀ வந்தாச்சி | - | ____________ |
| ❀ சேர்ந்தாச்சி | - | ____________ |
| ❀ சொமந்தோமே | - | ____________ |
| ❀ மாறுச்சா | - | ____________ |
| ❀ தீர்ந்துச்சா | - | ____________ |
| ❀ நெலமையென்ன | - | ____________ |

■ பழமொழிக்கு ஏற்ற கருத்தைக் கண்டுபிடியுங்கள்.

| பழமொழி | கருத்து |
|---|---|
| ❀ விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? | நன்றாக விளையக்கூடிய பயிர் முளைக்கும் போதே தெரியும். |
| ❀ கடின உழைப்பிற்கு ஈடுஇணை ஏதுமில்லை | நெல் விதைத்தால் தினை விளையுமா? |
| ❀ விளையும் பயிர் முளையிலே தெரியும் | உழைப்பின்றி வரும்பொருள் ஒரு நாளும் நிலையாது. |
| ❀ உழைப்பின்றி ஊதியமில்லை | உழைத்து வாழ்வோம் - பாரில் உயர்வு பெறுவோம். |

# மரம் வளர்த்த குரங்கு

குரங்கு ஒன்று காட்டிலிருந்த மாமரம் ஒன்றின் மீது ஏறி விளையாடிக் கொண்டிருந்தது. அங்குமிங்கும் தாவித்தாவித் தனது குரங்குச் சேட்டைகளை ஒன்று விடாமல் செய்து கொண்டிருந்தது.

வெகுநேரம் விளையாடியதில் அதற்குக் களைப்பு ஏற்பட்டது; பசியும் எடுத்தது.

அப்போது தற்செயலாகத் தானிருந்த மரத்தைக் கவனித்த குரங்கு அதில் மஞ்சள் நிறத்தில் பழங்கள் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டது.

ஒரு பழத்தைப் பறித்துச் சுவைத்துப் பார்த்தது. மிகவும் இனிப்பாக இருந்தது. இன்னொன்றைச் சுவைத்தது. அது அதற்குமேல் இனிப்பாக இருந்தது. இப்படியே ஒவ்வொன்றாகப் பல பழங்களைப் பறித்துச் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தது.

இப்படியே சாப்பிட்டுக் கொண்டே போனதில் மரத்திலிருந்த பழங்கள் எல்லாம் காலியாகிப் போயின.



குரங்குக்கு அந்தப் பழங்களின் சுவை நாக்கை விட்டு அகலவில்லை. அதற்கு ஆசை அடங்கவில்லை. மரத்தைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தது. பச்சை நிறத்தில் காய்கள் மட்டுமே இருந்தன. பழங்களே இல்லை.

மாங்கனியின் ருசி பற்றியே நினைத்துக்கொண்டிருந்த குரங்குக்கு ஒரு யோசனை தோன்றியது.

அது நல்ல யோசனைதான்.

தான் சாப்பிட்டுப் போட்ட பழங்களின் கொட்டைகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு போய் தனது இருப்பிடத்துக்கு அருகிலே புதைத்து வைத்தால் என்ன? மரம் வளர்ந்து நிறைய கனிகளைத் தருமே? தான் மட்டும் அக்கனிகளை உண்டு மகிழுவது மட்டுமல்லாமல் தனது கூட்டத்தாருக்கும் கொடுத்து மகிழலாமே. மாம்பழத்துக்காக இவ்வளவு தூரம் வரவேண்டிய தேவையும் நமக்கு இருக்காது. இப்படியே அந்தக் குரங்கின் சிந்தனை நீண்டுகொண்டே போனது.

ஒரு கட்டத்தில் தனது நீண்ட யோசனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, உடனே செயலில் இறங்க வேண்டும் என்று தீர்மானித்தது.

விழுந்ததிலேயே நல்லதாக ஒரு மாங்கொட்டையைத் தேர்வு செய்து எடுத்துக்கொண்டு தனது இருப்பிடத்தை நோக்கித் திரும்பியது குரங்கு.

நீண்ட தூரம் தாவித்தாவி வந்து இறுதியில் தனது இருப்பிடத்தை அடைந்தது. அந்தக் குரங்கும் அதன் கூட்டத்தாரும் வசித்த இடம் ஓர் அருவிக்கரை. அங்கு நிறைய மரங்கள் இருந்தாலும் மாமரங்கள் இல்லை.

இருப்பிடம் திரும்பிய குரங்கு, அங்கே ஒரு நல்ல இடத்தைத் தேர்வு செய்தது.

ஒரு தேர்ந்த விவசாயியைப் போல், அழகாக ஒரு குழிதோண்டி அதில் அந்த



மாங்கொட்டையைப் புதைத்தது. பின்னர் அந்த இடத்தில் அடையாளம் வைத்துவிட்டு தனது இருப்பிடத்துக்குச் சென்று நன்றாக உறங்கியது.

மறுநாள் காலையில் எழுந்தவுடன் மாங்கொட்டையைப் புதைத்த இடத்துக்கு வேக வேகமாக வந்தது.

அங்கே மரம் ஒன்றும் வளராததைக் கண்டு மனம் பதைத்தது. உடனே புதைத்த இடத்தைத் தோண்டிப் பார்த்தது. அந்த மாங்கொட்டை அப்படியே இருந்தது. மாங்கொட்டையில் துளிர்கூட விடவில்லை.

குரங்கு ஏமாற்றத்துடன், மீண்டும் அதே இடத்திலேயே அந்தக் கொட்டையைப் புதைத்து வைத்தது. பிறகு தனது இருப்பிடம் திரும்பியது.

மறுநாளும் விடிந்தும் விடியாமலும் இருக்கும்போதே அந்த இடத்துக்கு ஓடோடி வந்தது.

மண்ணிலிருந்த மாங்கொட்டையை எடுத்துப் பார்த்தது. செடி முளைக்காததைக் கண்டு வருத்தத்துடன் மீண்டும் புதைத்து வைத்துவிட்டுச் சென்றது.

இப்படியே பலநாட்கள் சென்றன. அந்த மாங்கொட்டைக்கு முளைப்பதற்குக் கூட அவகாசம் கொடுக்காமல் தினமும் தோண்டியெடுத்து மீண்டும் புதைத்து வைத்ததில் அந்தக் கொட்டை அழுகிப்போய் மக்கத் தொடங்கியது.

சிலநாட்கள் இப்படியே சென்றன. கடைசியாக ஒருநாள் மனம் வெறுத்துப்போய் குரங்கு அந்த மாங்கொட்டையை மண்ணிலிருந்து பிடுங்கியெடுத்துத் தூர வீசியெறிந்தது.

மண்ணில் புதைந்து இயல்பான வளர்ச்சியைப் பெற்று பெரிய மரமாகிக் கனி தரவேண்டிய அந்த மாங்கொட்டை, பொறுமையும் தெளிவான அறிவுமில்லாத குரங்குப் புத்தியால், வீணாக வாடி வதங்கிப் போனது.

**- மதுரை க.பரமசிவன்**



## செயல்பாடுகள்

- **மாங்கனியின் ருசியைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்த குரங்கு என்ன யோசனை செய்தது? பாடப்பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.**

நான் சாப்பிட்டுப் போட்ட ______________________________

______________________________________________

- **குரங்கு மேலும் யோசனை செய்துகொண்டிருந்தது அல்லவா! வேறு என்னென்ன யோசனை செய்திருக்கும்? எழுதுங்கள்.**

  - மரம் முளைத்தால் வேலி போட்டுப் பாதுகாக்கவேண்டும்.
  - ______________________________
  - ______________________________

- **மாங்கொட்டை முளைத்திருந்தால் குரங்கு என்னென்ன செய்திருக்கும்? சொல்லுங்கள்.**

- **உங்களுக்கு மரம் நட்ட அனுபவங்கள் ஏதேனும் உள்ளனவா? எழுதுங்கள்.**


______________________________________________

______________________________________________

______________________________________________

- **குரங்கின் செயலைப் பார்த்து ஆதங்கப்பட்ட முயல் என்ன செய்திருக்கும்? சிந்தித்து எழுதுங்கள்.**

  - முயல் குரங்கை அழைத்தது.
  - வேறொரு மாங்கொட்டை எடுத்து வரச் சொன்னது.
  - ______________________________
  - ______________________________
  - ______________________________
  - ______________________________



## தடித்த சொற்களுக்குப் பன்மைத்தொடர் எழுதுங்கள்.

எ.கா. :

- மாமரத்தில் ஏராளமாகப் **பழம்** தொங்கிக்கொண்டிருந்தன.

  மாமரத்தில் ஏராளமாகப் **பழங்கள்** தொங்கிக்கொண்டிருந்தன.

- மாந்தோப்பில் நிறைய **மரம்** வளர்ந்திருந்தன.

  _______________________________________

- **குரங்கு** மரங்களில் தாவித்தாவி விளையாடிக்கொண்டிருந்தன.

  _______________________________________

- மழை நீர் வற்றிப்போக சில **நாள்** சென்றன.

  _______________________________________

- மாம்பழங்கள் தீர்ந்த பின்பு மரத்தில் ஏராளமான **காய்** இருந்தன.

  _______________________________________

## ஓர் எழுத்தை மாற்றிச் சொற்றொடர் எழுதுங்கள்.

எ.கா. :

- மந்திரி - மரத்தில் தாவும் மந்தி
- பருந்து - _______________
- பாண்டம் - _______________
- நகரம் - _______________
- கணினி - _______________
- பகல் - _______________

# உலகின் தொழில்

உழவனின்றி உலகம் இல்லை
என்றே சொல்லடா
உண்மையிதை மனதிலெண்ணி
பெருமை கொள்ளடா

பெருமைக் காக உழுதகாலம்
மாறிப் போச்சுடா
வெருமைக் காட்டு சிங்கம்போல
உழவன் நிலையடா

உலக மக்கள் உணவுக்காக
உன்னை நாடுவார்
உழைப் பதையே கேவலமாய்
எண்ணி ஏசுவார்

இயற்கை தந்த புத்தகத்தைப்
படித்துத் தேர்ந்தவன்
இனிய வாழ்வை உலகினுக்குக்
கொடுக்க உழுதவன்



மாடுகட்டிப் போரடித்துநீர்
மடையைத் திறந்தவன்
மாடி வீட்டு மக்களுக்கும்
பசிப்பிணியைத் தீர்த்தவன்

தேடிவரும் தொழிலுக்கெல்லாம்
பொருளைத் தேடிதருபவன்
நாடிவரும் அனைவருக்கும்
நன்மைபல செய்பவன்

ஏர்முனைக்கு நேர்முனைதான்
இந்த உலகில் ஏதடா
போர்முனையின் கூர்முனையே
இந்த உழவின் பலமடா

உழவை மறந்து ஊரை ஏய்க்கும்
கால நிலையடா இதன்
விளைவை எண்ணி ஏங்கும் காலம்
விரைவில் வருமடா

– அரூர் பொ. பொன்னுரங்கன்



## செயல்பாடுகள்

- **பாடலுக்குப் பல்வேறு மெட்டுகள் அமைத்துப் பாட்டுப் போட்டி நடத்துங்கள்**
- **கீழே தரப்பட்டுள்ள பாடல்வரிகள் கூறும் உழவனின் பெருமை என்ன?**

“மாடி வீட்டு மக்களுக்கும்
பசிப்பிணியைத் தீர்த்தவன்
நாடிவரும் அனைவருக்கும்
நன்மைபல செய்பவன்”

______________________________

______________________________

______________________________

______________________________

- **இப்பாடலில் உங்களைக் கவர்ந்த வரிகள் எவை? ஏன்? கூறுங்கள்.**
- **பாடலை முழுமைப்படுத்துங்கள்.**

நல்ல நல்ல உழவன்
நாடு போற்றும் உழவன்
பாடுபடும் உழவன்
பயிர் செய்யும் உழவன்

**பார்போற்றும்** ______________________

______________________________


**தேசம் போற்றும்** ______________________

______________________________

**ஊர்போற்றும்** ______________________

______________________________

பசிதீர்க்கும்
நேசம் காட்டும்
ஏர் பூட்டும்



**அடிக்கோடிட்ட சொல்லுக்கு இணையான சொல்லைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடியுங்கள்**

- வட்டவடை கிராமத்து மக்கள் **நோயால்** மிகவும் வருந்தினர்.
- விவசாயிகளைக் காலநிலை **ஏமாற்றி** விட்டது.
- காகம் வளம் நிறைந்த வாழ்க்கையை **விரும்பிச்** சென்றது.
- ஊர் மக்கள் **விலங்கு**களைப் போன்று வாழ்ந்து வந்தனர்.

**ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.**

| சொல்லடா | கொள்ளடா |
|---|---|
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |

**தொடரிலுள்ள சொற்களைக் கண்டுபிடியுங்கள்.**

**எ.கா. :**

| | | | |
|---|---|---|---|
| **பசிப்பிணி** | – | **பசி,** | **பிணி** |
| மனதிலெண்ணி | – | _ _ _ _ _ _, | _ _ _ _ _ |
| உழவனின்றி | – | _ _ _ _ _ _, | _ _ _ _ _ |
| போரடித்து | – | _ _ _ _ _ _, | _ _ _ _ _ |
| உண்மையிதை | – | _ _ _ _ _ _, | _ _ _ _ _ |
| தொழிலுக்கெல்லாம் | – | _ _ _ _ _ _, | _ _ _ _ _ |

# உழைத்தாலே உணவு

சோழநாட்டில் இந்திரபாலர் என்றொரு புத்தத் துறவி இருந்தார். அவருக்கு ஏராளமான சீடர்கள் இருந்தனர். அவருடைய மடத்திற்குச் சொந்தமாக ஒரு பெரிய தோட்டம் இருந்தது. நாள்தோறும் அவர் சீடர்களுடன் தோட்டத்திற்குச் செல்வார். மண்வெட்டியை எடுத்து நிலத்தை ஒழுங்கு செய்வார். துடைப்பம் கொண்டு தோட்டத்தைப் பெருக்குவார். அவருக்கு வயது எண்பது ஆயிற்று. தள்ளாடும் அந்த முதுமைப் பருவத்திலும் அவர் நாள்தோறும் செய்யும் தோட்ட வேலையை விடவில்லை. சீடர்கள் அவரிடம், "தோட்ட வேலையை நாங்களே பொறுப்பாகச் செய்கிறோம். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்கள். ஆனால் சீடர்களின் பேச்சை அவர் கேட்கவில்லை. நாள்தோறும் தோட்டத்திற்கு வந்து உழைத்துக்கொண்டே இருந்தார்.



“இந்த வயதில் நம் குரு எதற்காகத் துன்பப்பட வேண்டும்? நாம் சொன்னாலும் அவர் கேட்பதில்லையே! என்ன செய்யலாம்?” என்று கேட்டான் ஒரு சீடன். ‘‘தோட்டத்தில் உள்ள மண்வெட்டி, கடப்பாரை போன்றவற்றை நாம் எங்கேயாவது மறைத்து வைத்து விடுவோம். அவை இல்லாவிட்டால் நம் குருவால் எந்த வேலையும் செய்ய முடியாது. ஓய்வெடுத்துக் கொள்வார்” என்றான் இன்னொரு சீடன்.

தோட்டத்தில் இருந்த கருவிகள் அவன் திட்டப்படி மறைத்து வைக்கப்பட்டன. குரு வழக்கம்போல வேலை செய்வதற்காகத் தோட்டத்திற்கு வந்தார். மண்வெட்டி, கடப்பாரை போன்றவை அங்கு இல்லாததால் அவர் தோட்ட வேலை செய்ய முடியவில்லை. பின் குருகுலத்திற்குத் திரும்பி வந்த குரு இந்திரபாலர் அன்று எதுவும் சாப்பிடவில்லை. மறுநாளும் எதுவும் சாப்பிடவில்லை. இதை அறிந்த சீடர்கள் மிகவும் வருந்தினார்கள்.



“நாம் செய்த செயலால்தான் குரு கோபம் கொண்டுள்ளார். மீண்டும். அந்தக் கருவிகளைத் தோட்டத்தில் வைத்து விடுவோம்'' என்றான் ஒரு சீடன். அதன்படி மீண்டும் அந்தக் கருவிகள் தோட்டத்தில் வைக்கப்பட்டன. அன்று தோட்டத்திற்கு வந்த குரு வழக்கம்போல தன் வேலைகளைச் செய்தார்.

இரவு நேரம் வந்தது. சீடர்களுடன் அமர்ந்து மகிழ்ச்சியாக உண்டார். அப்போது ஒரு சீடன் ‘‘நீங்கள் துன்பப்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில்தான் தோட்டக் கருவிகளை மறைத்து வைத்தோம். அதற்காக உங்கள் உடலை வருத்திக் கொண்டு உண்ணாவிரதம் இருக்கலாமா?” என்று கேட்டான். அதற்குக் குரு இந்திரபாலர் சொன்னார். “உழைப்பவர்களுக்கே உண்ணும் உரிமை உண்டு. எனக்குத் தோட்டத்தில் வேலை இல்லாததால்தான் உணவு உண்ணாமல் இருந்தேன்” என்று சொன்னதும் சீடர்கள் வாயடைத்து நின்றார்கள்.

**- எடையூர் சிவமதி**



## செயல்பாடுகள்

- கதையின் சிறுபகுதியை உரையாடலாக மாற்றி எழுதுங்கள்.
- விவசாயக் கருவிகளைச் சீடர்கள் மறைத்து வைத்தது சரியா? உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- நீங்கள் சீடர்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
- நான் யார்?

குட்டையான அழகிக்கு
நெட்டையான சடை.



ஒன்பது பிள்ளைகளுக்கும்
ஒரே குடுமி



ஊசி நுழையாத கிணற்றில்
ஒரு பிடித் தண்ணீர்



ஏணை கோணல் மூணு
கண் ஆறு கால் பத்து



பச்சை பசேல் என்றிருக்கும்
பந்திக்கு முன்னால் நிற்கும்
பசியாறியவுடன் பாதையிலே கிடக்கும்.



உழைக்காமல் உண்பது சரியா? கலந்துரையாடுங்கள். கருத்துகள் கூறுங்கள்.

முதல் எழுத்தை மாற்றி வேறு சொல் உருவாக்குங்கள்.

எ.கா. :


| பகல் | அகல் | நகல் | இகல் |
|---|---|---|---|
| குஞ்சு | _ _ _ _ | _ _ _ _ | _ _ _ _ |
| பாசம் | _ _ _ _ | _ _ _ _ | _ _ _ _ |
| சினம் | _ _ _ _ | _ _ _ _ | _ _ _ _ |
| பெட்டி | _ _ _ _ | _ _ _ _ | _ _ _ _ |

சொற்றொடர் எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| பசு | கவிதை | இயற்றினார் |
| சிங்கம் | புல் | தந்தது |
| கார்மேகம் | காட்டிற்குள் | எழுதினாள் |
| கனிமொழி | பாடலை | சென்றது |
| புலவர் | மழையைத் | மேய்ந்தது |

எ.கா. :

- பசு புல் மேய்ந்தது.
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _



# 5

# காற்றினிலே வரும் கீதம்



கலை வடிவங்கள், நமது பண்பாட்டுச் சின்னங்கள் ஆகும். அழிந்து வரும் கலைகளையும் கலைவடிவங்களையும் பேணிக்காப்பது நமது ஒவ்வொருவரின் கடமையாகும். இசை ஒரு மனிதனின் மனதைக் குளிர வைக்கும். அப்படிப்பட்ட இசையையும் இசைக்கருவிகளையும் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும் போன்ற கருத்துகளைக் குழந்தைகள் அடையும் வகையில் இவ்வலகு அமைகிறது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்


- வாசித்து இரசித்த படைப்புகளைப் போலச்செய்தல், மூகநடிப்பு வாயிலாக வெளியிடுகிறார்கள்.
- கேட்டறிந்த கதைகளைச் சொந்த நடையில் கூறுகிறார்கள். குறிப்பு களின் அடிப்படையில் எழுதி வெளியிடுகிறார்கள்.
- தனது படைப்புடன் பிற படைப்புகளை உட்படுத்தித் தொகுப்பு உருவாக்கி வெளியிடுகிறார்கள்.
- கலை, பண்பாடு, விளையாட்டு இவற்றுடன் தொடர்புடைய வடிவங்களைப் பற்றி விளக்கவுரை எழுதுகிறார்கள். தேவையான நேரங்களில் நிகழ்ச்சிகளை வடிவமைத்து நடத்துகிறார்கள்.

# இணையில்லாத தெய்வீக இசை

ஒருநாள் இசை நிகழ்ச்சி முடிந்ததும் அக்பரும் பீர்பாலும் அரண்மனைத் தோட்டத்திலிருக்கும் புல் தரையில் நடந்து கொண்டிருந்தனர். அப்போது அக்பர் பீர்பாலிடம், ‘தான்சேனுடைய பாடலைக் கேட்டதால் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவருடைய இசையில் தெய்வீக சக்தி உள்ளது. அவர்தான் இந்தப் பூலோகத்திலேயே மிகவும் சிறந்த பாடகர்’ என்று கூறினார்.

அதற்குப் பீர்பால், ‘ஆம் அரசே! ஆனால் தான்சேன் இதை ஒத்துக்கொள்வதில்லை. அவர் தன்னுடைய குரு ஹரிதாஸ்தாம் சிறந்த பாடகர்’ என்று கூறுகிறார். மேலும் ஹரிதாஸின் தெய்வீக இசைக்கு உயிரினங்கள் மட்டுமின்றி, ஐம்பூதங்களும் செவி சாய்ப்பதாகக் கூறுகின்றார் என்று பீர்பால் பதில் கூறினார்.

அதைக் கேட்ட அக்பர் உடனடியாகத் தான்சேனைத் தன்னுடைய அரண்மனைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அரண்மனைக்குள் நுழைந்த தான்சேனிடம் அக்பர், ‘தான்சேன், உங்கள் குரு உங்களைவிட நன்றாகப்



பாடுவதாக நீங்கள் கூறினீர்களாமே? ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இந்த உலகத்திலேயே நீங்கள்தான் சிறந்த பாடகர்'. என்று கூறினார்.

அதற்குத் தான்சேன், 'அரசே! 'என்னுடைய குருநாதன் தெய்வீகப் பாடகர். தும்புராவின் மறுஅவதாரம். அவரைப் போல் சிறப்பாக வேறு யாராலும் பாட முடியாது' என்று கூறினார்.

'தான்சேன். நான் உங்கள் குருநாதரின் பாடலைக் கேட்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார் அக்பர்.

தான்சேன். 'அரசே அவர் பிருந்தாவனத்தில் உள்ள தன்னுடைய ஆசிரமத்தில் வசிக்கிறார். நீங்கள் அவருடைய ஆசிரமத்திற்குச் சென்றால் அவர் பாடுவதைக் கேட்கலாம்' என்று யோசனை கூறினார்.

மறுநாள் அக்பர் பிருந்தாவனத்திற்குச் செல்வதற்கு ஆயத்தமானார்.

பேரரசர் அக்பருடன் பீர்பாலும் தான்சேனும் இரதத்தில் ஏறிச் சென்றனர்.

தான்சேன் அவர்கள் இருவரையும் குருநாதரிடம் அறிமுகம் செய்து விட்டு, அவ்விருவரும் வந்திருப்பதற்கான காரணத்தையும் கூறினார்.



அதற்கு ஹரிதாஸ், ‘அரசே நீங்கள் கேட்பது போல், என்னால் உடனடியாகப் பாட முடியாது. என்னுள் ஒரு ஆத்ம உணர்ச்சி ஏற்பட்டால் தான் உள்ளம் உருகிப் பாடமுடியும்’ என்று கூறினார்.

அப்போது பீர்பால் தான்சேனை வெளியே அழைத்துச் சென்று ‘உங்களுடைய குருநாதருக்குப் பேரரசர் அக்பரின் முன்னால் பாடுவதற்கு விருப்பம் இல்லை. இப்பொழுது அவரை எப்படிப் பாட வைப்பது என்பதற்கு யோசனையை நீங்கள் தான் கூற வேண்டும்?’ என்று கேட்டார்.

அதற்குத் தான்சேன். ‘என்னிடம் ஒரே ஒரு வழி மட்டும்தான் உள்ளது. யாராவது தவறாகப் பாடினால் என்னுடைய குருநாதர் அதைத் திருத்துவதற்காகத் தான் பாடத் தொடங்கி விடுவார்’ என்று கூறினார்.

ஆசிரமத்தினுள் நுழைந்த தான்சேன் ஹரிதாஸால் பாடப்பட்ட பைரவி இராகத்தைத் தவறாகப் பாடினார். அதைக் கேட்ட ஹரிதாஸ் கோபமடைந்தார். தான்சேனுக்கு அவ்விதம் தவறாகப் பாடக்கூடாது என அறிவுரை வழங்கிய ஹரிதாஸ் தானே பாடத் தொடங்கினார்.



அவரது தெய்வீக இசையைக் கேட்டு, மறைந்திருந்த அக்பர் ஆனந்தமடைந்தார். பின் அக்பரும், தான்சேனும் ஹரிதாஸிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர்.


அவர்கள் அரண்மனைக்குத் திரும்பிச் செல்லும் வழியில் அக்பர் பீர்பாலிடம் தான்சேன் ஏன் அவரின் குருநாதரைப் போல் பாடுவதில்லை என்று கேட்டார்.

அப்போது பீர்பால் ''தான்சேனின் இசை, ஹரிதாஸின் இசைக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல. அது பாடுவதைப் பொறுத்து அமைகிறது. தான்சேன் உங்களை மகிழ்விப்பதற்காகப் பாடுகிறார். ஆனால் அவருடைய குருநாதர் ஹரிதாஸ் கடவுளை மகிழ்விப்பதற்காகப் பாடுகிறார். இது தான் வித்தியாசம்" என்று பீர்பால் விளக்கமளித்தார்.

அக்பர் பீர்பாலின் புத்திசாலித்தனமான பதிலைப் பாராட்டினார்.

தெய்வீக இசைக்கு ஈடு இணை வேறு எதுவும் இல்லை.

**– அக்பர் பீர்பால் கதைகள்**



## செயல்பாடுகள்

- கதையில் உங்களுக்கு விருப்பமான பகுதியை நடித்துக் காட்டுங்கள்.



- ஹரிதாஸ் பாடாமல் இருந்திருந்தால் அக்பர் என்ன செய்திருப்பார்? உங்கள் கருத்தைக் கூறுங்கள்.

- உங்கள் வகுப்பில் சிறந்த பாடகர் யார்? பாட்டுப் போட்டி நடத்துங்கள். சிறந்த பாடகரைத் தேர்வு செய்யுங்கள்.



- புதிய சொற்கள் உருவாக்குங்கள்.

எ.கா. :

| | | | | |
|---|---|---|---|---|
| பத்திரிகை | : | பத்தி, | பகை, | திரி |
| ஆசிரமம் | : | _ _ _, | _ _ _, | _ _ _ |
| கல்விச்சாலை | : | _ _ _, | _ _ _, | _ _ _ |
| அவதாரம் | : | _ _ _, | _ _ _, | _ _ _ |
| அகங்காரம் | : | _ _ _, | _ _ _, | _ _ _ |
| தராசுத்தட்டு | : | _ _ _, | _ _ _, | _ _ _ |

**கதைக் குறிப்பை வாசித்துக் கதை எழுதுங்கள். பொருத்தமான தலைப்பு அளியுங்கள்.**

**கதைக்குறிப்பு**

கொடுங்கோல் மன்னன் ஆட்சி ____ அறிவுள்ள இளைஞன் ____ அவன் புகழ் அரசனுக்குப் பிடிக்கவில்லை ____ வானத்தில் மாளிகை கட்ட அரசர் உத்தரவு ____ ஒரு வாரத்தில் முடிக்க வேண்டும். இல்லையெனில் மரணதண்டனை ____ இளைஞன் சிந்தித்தான் ____ பட்டம் செய்தான் ____ மணிகட்டி பறக்கவிட்டான் ____ பட்டத்தில் மணி குலுங்கியது ____ மக்கள் கூடினர் ____ செங்கல் முதலான கட்டிடப்பொருட்கள் மேலே கொண்டு தாருங்கள் என்றான் இளைஞன் ____ மக்கள் குழம்பினர் ____ அரசன் வெட்கினான் ____ புத்திக் கூர்மையால் வென்றான்.

**கட்டத்தில் மறைந்திருக்கும் இசைக்கருவிகளைக் கண்டுபிடியுங்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | ர | ம | கி | மி | கு | மு |
| ப | உ | த் | பி | ல | கொ | ர |
| ம | ரு | த | ங் | க | ம் | சு |
| சி | மி | ள | த | ப | பு | அ |
| வீ | ணை | ம் | வி | றை | ல | ரு |
| சு | ங் | கி | ல் | டி | மை | ம் |

- தவில்
- _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _

# தோல் வாத்தியங்கள்



### இடக்கா

கேரள நாட்டின் இடக்கா என்ற பறையின் மீது தோல்களைப் பொருத்தும் திறமை மிகவும் வளர்ச்சி பெற்று அது ஒரு தனிக்கலையாகவே விளங்குகிறது. இது புதிய வாத்தியமன்று. கேரள நாட்டிற்கு மட்டுமே உரியதுமன்று. இந்தியாவின் பல பாகங்களிலும் உள்ள சிற்பங்களிலும், குறிப்பாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன் செதுக்கப்பட்ட கர்நாடகச் சிற்பங்களிலும் இக்கருவி காணப்படுகிறது. ஆயினும் இன்று இது கேரள நாட்டிலே தான் முழு வளர்ச்சியடைந்து சிறந்த ஒலியுடைய ஒரு தோல்கருவியாக வழங்குகிறது. சுமார் முக்கால் மீட்டர் நீளமுள்ள இடக்காவின் உடல் மரத்தாலானது. சந்திரப்பிறையைப் போலவே, தோல்கள் இந்த உலோக வளையங்களில் இழுத்துக் கட்டப்பட்டு உடலின் இருபுறங்களிலும் பொருத்தப்படுகின்றன. அதன் வாயின் குறுக்கே தென்னை மரத்தாலான இரு குச்சிகளைப் பொருத்தியிருப்பதால், கருவியின் ஓசையில் ஒரு ரீங்காரம் ஒலித்துக் கொண்டேயிருக்கும். கருவியின் இரு தலைகளும் பருத்தி நூல் நாடாக்களால் உடலுடன் சேர்த்துக் கட்டடப்பட்டிருக்கும்.

தோல்கள் உடலுடன் சாசுவதமாகக் கட்டப்படுவதில்லை. இவற்றால் கருவியை வாசிப்பவர் ஓரளவிற்கு அதன் உடலைத் தோல்களின் பக்கமாகத் தள்ள முடியும்.



இரு முகங்களையும் சேர்த்துக் கட்டியிருக்கும் நாடாக்களின் மேலே கருவியின் குறுகிய பாகத்தில் மற்றொரு நாடா கட்டப்பட்டிருக்கும். கருவியைத் தோளிலிருந்து தொங்க விட்டுக் கொள்ளக் கட்டியிருக்கும் தோல் வாருடன் இந்த நாடா இணைக்கப்படும். இதைத் தோளில் மாட்டிக் கொண்ட பிறகு வாசிப்பவர் நன்கு சாதகம் செய்யப்பட்ட ஒருமுறைப்படி இடக்காவை வாசிக்கத் தொடங்குவார். ஒரு கையினால் கோல் கொண்டு ஒரு முகத்தை அடிக்கும் பொழுது, மற்றொரு கையை நாடாக் களின் அடியில் நுழைத்து விடுவார். அங்கு நடுவில் கட்டப்பட்டிருக்கும் நாடாவை அவர் இறுக்கிப் பிடித்து, இடக்காவின் உடலைச் சிறிது தள்ளி, தோளிலிருந்து தொங்கும் வாரைச் சற்று இழுத்துப் பிடிப்பார். இவற்றையெல்லாம் அவர் லாவகமாகவும் திறமையுடனும் வேகமாகவும் செய்யும்பொழுது காண்போர் கண்ணிற்கு அவை புலப்படா. இத்தகைய உத்திகளைக் கையாண்டு இடைக்கா வாசிப்பவர்களால் எண்ணற்ற ஒலி ஜாலங்களைச் செய்து காட்ட முடியும்.

# தபலா

தபலா என்பது பாரசீக மொழிச்சொல். இது தோல்கருவி கள் அனைத்தை யுமே குறிக்கும். ஆனால் இக்கருவி பாரசீக நாட்டைச் சேர்ந்தததா? அயல் நாட்டிலிருந்து இந்தியாவிற்குப் படையெடுத்து வந்த அன்னியர் கள் இங்கு வழங்கிவந்த தோல் கருவிகளுக்கு இப்பெயரை இட்டிருக்கலாமல்லவா?



தபலா இந்தியாவிலேயே தோன்றிய இசைக்கருவி என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. கூம்பு வடிவமுள்ள பறைகள் நமது நாட்டில் பழங்காலத்திலிருந்தே காணப்படுகின்றன.

இந்தியாவிலும் பர்மாவிலும் தோலின் மீது ஒருவிதப் பசையைத் தடவுவது வழக்கம். இரண்டு அல்லது அதிகமான பறைகளைச் சேர்த்து வாசிப்பதும் நம் நாட்டுப் பண்டைய வழக்கம். இவையெல்லாம் தபலா ஒரு இந்தியக் கருவியே என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

தற்காலத்துத் தபலாவில் இரண்டு பறைகள் இருந்தபோதிலும் அதற்குத் தபலா என்ற பெயரே உள்ளது. இக்கருவி மரத்தினால் செய்யப்படுகிறது.

இதன் வாய் அகலத்தில் நடுவிலும் ஒரு தோல் உள்ளது. சுமார் இரண்டு சென்டிமீட்டர் அகலமுள்ள தோல்வாரைச் சுற்றிலும் ஒட்டி இதைப் பொருத்தியிருப்பார்கள்.

இதைத் தபலாவின் வாயுடன் சேர்த்துத் தோல்வார்களால் கட்டுவார்கள். தபலாவின் உடலுக்கும் தோல்வார்களுக்கும் இடையே சிறுசிறு மர முளைகளைப் பொருத்துவார்கள். இவற்றின் மூலம் தபலாவின் சுருதி கூட்ட முடியும். இன்னும் கூர்மையாகச் சுருதிச் சேர்க்க வேண்டுமாயின், சுத்தியினால் தட்ட வேண்டும். இதை மேற்புறம் ஏறும்படி அடித்தால் சுருதி குறையும். கீழே இறக்கினால் சுருதி ஏறும்.

தபலாவை விரல் நுனிகளாலும் உள்ளங்கையினாலும் அடிப்பார்கள்.

– டி.எஸ். பார்த்தசாரதி.

## செயல்பாடுகள்

- புல்லாங்குழல் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறுங்கள்.

- இசைக்கருவிகளை உரிய இடத்தில் எழுதுங்கள்.

| | |
|---|---|
| மத்தளம் | புல்லாங்குழல் |
| நாதஸ்வரம் | உடுக்கை |
| கொம்பு | செனாய் |
| செண்டை | தவில் |

| தோல்கருவிகள் | துளைக்கருவிகள் |
|---|---|
| தபலா | நாதஸ்வரம் |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |
| _ _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ _ |


- இசைக்கருவிகள் செய்வோம்; வாசிப்போம்

இலை பீப்பி





சிரட்டை முரசு



மூங்கில் புல்லாங்குழல்

# வில்லிசை



தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் காணப்படும் வில்லடி வாத்தியம் வில்லைப் போன்ற உருவமுடைய இசைக்கருவிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இதன் பெயரில் இருந்தே இதன் வடிவம் நமக்கு விளங்கும். தமிழிலும் மலையாள மொழியிலும் இதற்கு அடிக்கப்படும் ஒரு வில் என்று பொருள். இது மிக எளிய கருவி. சுமார் இரண்டு அல்லது மூன்று மீட்டர் நீளமுள்ள வில்லினால் அமைந்தது. அதன் நாண் சணல் கயிறு அல்லது தோல்வாரினால் ஆனது. இதை வாய் திறந்த மண்பானை மீது வைத்து வாசிக்கும் பொழுது, பானை ஒலி பெருக்கியாக அமைகிறது.

நாணில் கட்டப்பட்டிருக்கும் சிறு மணிகள் கயிற்றை அடிக்கும் பொழுது ஒலி எழுப்பும். நாடோடிக் கதைப்பாடல்களுக்கு இது இன்றியமையாத பக்கவாத்தியம் ஆகும். தலைமைப் பாடகர் தம் எதிரில் இதை வைத்துக்கொண்டு உட்காருவார். பாடும் போதுதடித்த இரண்டு கோல்களைக் கொண்டு வாத்தியத்தின் கயிற்றை அடிப்பார். பானையினுடைய ஒலி பெருக்கியினாலும் மணிகளின் இனிய ஓசையினாலும் அழகிய தாள உணர்ச்சி எழுப்பப்படும். பின்பாட்டுப் பாடுபவர்கள் தாளம், உடுக்கை முதலிய கருவிகளை முழக்கிக் கொண்டு அவருடன் பாடுவார்கள்.

## செயல்பாடுகள்

- வகுப்பறையில் ஒரு வில்லிசை நிகழ்ச்சி நடத்துங்கள்.

- கீழே உள்ள இரண்டு படங்களில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்.





- பொருத்தமான சொற்களை இணைத்துப் புதிய தொடர்கள் எழுதுங்கள்.

| | |
|---|---|
| மளிகை | தோட்டம் |
| தேயிலை | குருவி |
| கை | கண்ணாடி |
| மூக்கு | கரை |
| சிட்டு | அருவி |
| கடல் | எழுத்து |
| மலை | கடை |

**எ.கா. :**

மளிகைக் கடை

_ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _

# ஊனம் ஒரு தடையல்ல



உலகப்புகழ்பெற்ற பாடகர், இசையமைப்பாளர், பாடலாசிரியர் என்று பல சிறப்புகளைப் பெற்றவர் ரே சார்லஸ். இவரது பாடல்கள் கேட்போர் உள்ளத்தை உருக்கக்கூடியவை. இசைத்துறையின் உயரிய விருதாகக் கருதப்படும் கிராமி விருதைப் பன்னிரண்டு முறை பெற்றவர்.

மேடையில் இவர் தோன்றி பியானோ வாசித்துக்கொண்டே பாடும்போது நிகழ்ச்சியைக் காண்போர் இவர் பாடி முடித்ததும் ஆனந்தக் கண்ணீர் விடுவர். மகிழ்ச்சியுடன் தாளம் போடுவர்.

ரே சார்லஸ் எப்பொழுதும் கண்ணாடி அணிந்தே காட்சியளிப்பார். மேடையில் பாடும்போது கருப்புக் கண்ணாடியுடனேயே இருப்பார். என்ன காரணம் தெரியுமா? முற்றிலும் கண் பார்வை இழந்தவர் ரே சார்லஸ். பியானோ இசைப்பதற்கோ, இதர இசைக் கருவிகளை வாசிப்பதற்கோ இவருடைய பார்வையற்ற தன்மை தடையாகவோ, குறையாகவோ ஒருபோதும் இருந்ததில்லை.

இவர் 1930ஆம் ஆண்டில் பிறந்தார். அந்தக் காலகட்டத்தில் அமெரிக்காவில் பொருளாதார வீழ்ச்சி தலைதூக்கியது. நடுத்தரக்குடும்பத்தினர் வாழ்க்கை நடத்துவதற்கே மிகவும் சிரமப்பட்டனர். அதைவிட மோசமாக நிறவேற்றுமை தலைவிரித்தாடியது.

இவர் தன்னுடைய ஏழாவது வயதில் கண் பார்வையை இழந்தார். பார்வையற்றவர் களுக்கான செயிண்ட் அகஸ்டின் பள்ளியில் பயின்றார். பிரெயில் முறையில் பாடங்களையும் இசை வடிவங்களையும் எழுதும் முறைகளைக் கற்றுக் கொண்டார்.

பியானோ வாசிப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்ட ரே சார்லஸ் பள்ளியில் படிக்கும் போதே இசைக்கருவிகளை வாசிக்கக் கற்றுக் கொண்டதுடன் பாடல்களுக்கு இசையமைப்பதையும் அவ்வாறு இசையமைத்த பாடல்களின் ஒலி வடிவங்களை பிரெயில் முறையில் பதிவு செய்வதிலும் தேர்ச்சிப் பெற்றார். காது கேளாதவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு தொண்டு நிறுவனம் தொடங்கி நடத்தி வந்தார்.

உலகம் முழுவதும் பரந்து காணப்படும் இவருடைய ரசிகர்கள் இவரது பாடல்களைக் குறுந்தகடுகளில் பதிவு செய்து வைத்துக் கேட்டு, ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர் 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் நாள் காலமானார்.

பார்வையற்றவர் என்ற குறைபாடு அவரது முன்னேற்றத்திற்கோ புகழுக்கோ தடையாக ஒரு போதும் இருக்கவில்லை.

## செயல்பாடுகள்

- ‘பாடகன் ஆவதற்கு ஊனம் ஒரு தடையல்ல’ உங்கள் கருத்து என்ன? கூறுங்கள்.

- உங்களுக்கு விருப்பமான படங்கள் வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள். வகுப்பில் வெளியிடுங்கள்.

- செய்தித்தாள்களையும் சிறுவர் இதழ்களையும் திரட்டுங்கள். பல்வேறு இசைக்கலைஞர்கள் இசைக்கருவிகளின் படங்களை வெட்டியெடுங்கள். தொகுப்பேட்டில் ஒட்டிப் படத்தொகுப்பு தயாரியுங்கள்.

- களிமண்ணைப் பயன்படுத்தி என்னென்னப் பொருட்கள் செய்வீர்கள்? வகுப்பறையில் கண்காட்சி நடத்துங்கள்.

- சொற்களைப் பயன்படுத்திப் பொருத்தமான தொடர்கள் எழுதுங்கள்.

**எ.கா. :**

- நன்மை :- நல்லோர் நட்பு நன்மை பயக்கும்.
  தீமை :- தீயோரின் நட்பு தீமை ஏற்படுத்தும்.
- ஒற்றுமை :- _ _ _ _ _ _ _ _ _
  வேற்றுமை :- _ _ _ _ _ _ _ _ _
- பெருமை :- _ _ _ _ _ _ _ _ _
  சிறுமை :- _ _ _ _ _ _ _ _ _
- வறுமை :- _ _ _ _ _ _ _ _ _
  வளமை :- _ _ _ _ _ _ _ _ _
- உயர்வு :- _ _ _ _ _ _ _ _ _
  தாழ்வு :- _ _ _ _ _ _ _ _ _

# சொல்லகராதி

## அ

அண்டுதல் - சேருதல்

அணி - நகை

அயல் - பிற

அவகாசம் - காலநீட்டிப்பு

அவதாரம் - பிறப்பு

அவனி - உலகம்

அரிய - அபூர்வமான

அருவி - நீர்வீழ்ச்சி

அன்னியர் - வெளியாள்

## ஆ

ஆயத்தம் - தயார் நிலை

ஆதாரம் - சான்று

## இ

இரதம் - தேர்

## ஈ

ஈர்ப்பு - கவர்ச்சி

ஈடுஇணை - ஒன்றிற்குச் சமமாக

## ஏ

ஏய்க்கும் - ஏமாற்றும்

ஏழ்மை - வறுமை

ஏடு - புத்தகம்

## உ

உற்ற - நெருங்கிய

உடமை - சொத்து

உவந்து - விரும்பி

உருகி - இளகி

உறுதி - திடம்

உத்தி - செயல்

## ஓ

ஓய்வு - பணி நிறைவு

## க

கனி - பழம்

## ச

சாசுவதம் - நிலையான

சாதகம் - அனுகூலம்

சாதம் - சோறு

சினந்து - கோபப்பட்டு

சுருதி - இசை

செறிந்து - மறிந்து, நெருங்கி

சேதம் - அழிவு

சோகம் - கவலை

## த

துடைப்பம் - வாரியல்

தேசம் - நாடு

தொண்டு - சேவை

## ந

நச்சு - நஞ்சு, விடம்

நாடா - கயிறு

நாண் - கயிறு

## ப

பண்டம் - பொருள்

பதைத்து - நடுங்கி

பிணி - நோய்

பிறை - நிலாவின் பகுதி

புசித்து - தின்று

புலப்படா - கண்ணுக்குத் தெரியாத

பேதம் - பிரிவு

## ம

மக்குதல் - அழுகுதல்

மாதர் - பெண்கள்

மாய்த்து - அழித்து

முதுமை - வயதான நிலை

முனைந்து - விரைவாகச் செயல்பட்டு

## வ

வணிகம் - வியாபாரம்

வருத்தி - துன்புறுத்தி

வருந்தி - துன்பப்பட்டு

வளம் - செழிப்பு

விசனம் - வருத்தம்

விரதம் - நோன்பு

விருது - பரிசு

வீதி - தெரு

வேழம் - யானை